




admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்








| Vol: 03 | Issue: 11 | 4 Pages | 11.8.2025 | Monday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 03 | இதழ்: 11 | 4 பக்கங்கள் | 11.8.2025 | திங்கட்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |




**பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னுஞ்**
**செம்பொருள் காண்ப தறிவு**

**விளக்கம்:**
பிறவித்துன்பத்திற்கு காரணமான அறியாமை நீங்குமாறு முக்தி எனும் சிறந்த நிலைக்குக் காரணமான செம்பொருளைக் காண்பதே மெய்யுணர்வு.

## மும்பையில் சட்டவிரோதமாக தங்கியிருந்த 112 வங்கதேசத்தினர் நாடு கடத்தல்

மும்பை, ஆக. 11

மும்பை பெருநகரில் சட்டவிரோதமாக அதிகளவில் வங்கதேசத்தினர் வசித்து வருகின்றனர். போலீசார் அவர்களை கண்டறிந்து நாடு கடத்தி வருகின்றனர். இந்தநிலையில் மும்பை பெருநகரில் சட்டவிரோதமாக வசித்து வந்த 112 வங்கதேசத்தினர் கடந்த வியாழக்கிழமை நாடு கடத்தப்பட்டு இருப்பதாக போலீசார் தெரிவித்துள்ளனர்.

இதில் 92 பேர் மும்பையிலும், 20 பேர் மிராபயந்தர், தானே பகுதியிலும் வசித்து வந்தவர்கள் ஆவர். 112 பேரும் புனே கொண்டு செல்லப்பட்டனர். பின்னர் அங்கிருந்து விமானப்படை விமானத்தில் அசாம் வங்கதேச எல்லைக்கு கொண்டு செல்லப்பட்ட அவர்கள், வங்கதேச பாதுகாப்பு படையினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

மும்பையில் இருந்து நாடு கடத்தப்பட்ட 92 பேரில் 40 பேர் பெண்கள். 34 பேர் சிறுவர் சிறுமிகள். 18 பேர் ஆண்கள். இதன் மூலம் நடப்பாண்டில் மட்டும் மும்பையில் இருந்து வங்கதேசத்துக்கு நாடு கடத்தப்பட்டவர்கள் எண்ணிக்கை 719 ஆக அதிகரித்து உள்ளது. 2024ம் ஆண்டு மும்பையில் இருந்து 152 வங்கதேசத்தினர் மட்டுமே நாடு கடத்தப்பட்டு இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## விக்ரம்1 ராக்கெட்டுக்கான ‘கலாம்1200’ மோட்டார் சோதனை வெற்றி இஸ்ரோ தகவல்



சென்னை, ஆக. 11

தெலுங்கானாமாநிலம்ஐதராபாத்தை தலைமையிடமாக கொண்டு செயல்படும் ‘ஸ்கைரூட் ஏரோஸ்பேஸ்’ என்ற நிறுவனத்தால் ‘விக்ரம்1’ என்ற தனியார் ராக்கெட் ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து விரைவில் விண்ணில் ஏவப்பட உள்ளது. இதற்கான ராக்கெட் கட்டமைக்கப்பட்டு வருகிறது. இதில் ராக்கெட்டின் முதல் நிலை உந்துவிசைக்காக ‘கலாம்1200’ என்ற திட மோட்டார் பயன்படுத்தப்படுகிறது.

ஸ்ரீஹரிகோட்டாவிலுள்ள சதீஷ் தவான் விண்வெளி ஆய்வு மையத்திலுள்ள நிலையான சோதனை வளாகத்தில் இந்த மோட்டார் சோதனை செய்து பார்க்கப்பட்டது. அது வெற்றிகரமாக நடந்து முடிந்தது. இதுகுறித்து இஸ்ரோ விஞ்ஞானிகள் கூறும்போது, “விக்ரம்1 ராக்கெட்டில் பயன்படுத்தப்பட உள்ள கலாம்1200 திட மோட்டார் பயன்படுத்தப்படுகிறது. இது ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள திட எரிபொருள் ஆலையில் தயாரிக்கப்பட்ட மிக நீளமான ஒற்றைக்கல் மோட்டார் ஆகும். இது 11 மீட்டர் நீளம், 1.7 மீட்டர் விட்டம் கொண்டதாகும். இது 30 டன் திட எரிபொருளை தாங்கி உள்ளது. இந்த மோட்டாரின் சோதனை வெற்றி அடைந்தது.

இந்த சோதனை இந்திய அரசின் விண்வெளி கொள்கை2023 உடன் ஒத்துப்போகிறது. இது தனியார் நிறுவனங்கள் இந்தியாவின் விண்வெளி பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக இஸ்ரோவின் தொழில்நுட்ப உள்கட்டமைப்பு மற்றும் நிபுணத்துவத்தைப் பயன்படுத்த ஊக்குவிக்கிறது. இந்த சோதனை ஒரு முக்கிய மைல்கல் ஆகும்” என்று தெரிவித்தனர்.

## ராகுல் காந்தி கூறிய ‘வாக்கு திருட்டு’ குற்றச்சாட்டு; விரிவான விசாரணை நடத்த வேண்டும் சரத்பவார் வலியுறுத்தல்



மும்பை, ஆக. 11

காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவரும், மக்களவை எதிர்க்கட்சி தலைவருமான ராகுல்காந்தி, சமீபத்தில் கர்நாடகாவில் உள்ள ஒரு தொகுதியில் வாக்காளர் பட்டியலில் நடைபெற்ற முறைகேடுகளை வெளியிட்டார். அதற்கான ஆதாரங்களையும் அவர் குறிப்பிட்டார். பா.ஜனதாவும், தேர்தல் ஆணையமும் கூட்டு சேர்ந்து இதுபோன்ற பெரிய மோசடியில் ஈடுபட்டதாகவும் தெரிவித்தார்.

இந்த குற்றச்சாட்டுகள் குறித்து தேசியவாத காங்கிரஸ்(எஸ்.பி.) கட்சியின் தலைவர் சரத்பவார் நேற்று நாக்பூரில் செய்தியாளர்களிடம் பேசியபோது, “ஓட்டுகள் திருடப்பட்டது குறித்து ராகுல்காந்தி வெளியிட்ட விளக்கப்படம் பல கட்ட விசாரணைக்கு பின்னர் ஆவணப்படுத்தப்பட்டு உள்ளது. இதனால் மக்களிடையே தேர்தல் செயல்முறையில் உள்ள நேர்மை தன்மை குறித்த சந்தேகங்களை தீர்க்க ராகுல்காந்தியின் குற்றச்சாட்டுகள் குறித்து விரிவான விசாரணை தேவை.

விசாரணை மட்டுமே உண்மையை வெளிக்கொண்டுவர உதவும் என்று நான் நினைக்கிறேன். ராகுல்காந்தி நாடாளுமன்றத்திலும் இந்த குற்றச்சாட்டை கூறினார். எனவே தேர்தல் ஆணையம் அவரிடம் கையெழுத்திட்ட பிரமாண பத்திரம் கேட்பது முறை இல்லை” என்று கூறினார்.

வாக்காளர் பட்டியல் முறைகேடு குற்றச்சாட்டு தேர்தல் ஆணையத்தின் நற்பெயரை கெடுத்துவிடாதா என்ற கேள்விக்கு பதில் அளித்த அவர், “ராகுல்காந்தி உண்மையான ஆதாரங்களுடன் எழுப்பிய பிரச்சினைகளை புறக்கணிக்க முடியாது. நாங்கள் சொல்வதில் எந்த உண்மையும் இல்லையென்றால், தேர்தல் ஆணையம் அதை தெளிவாக கூறவேண்டும். அப்படி செய்தால் தேர்தல் ஆணையம் போன்ற முக்கிய நிறுவனங்களின் கவுரவம் பராமரிக்கப்படும்” என்றார்.

அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப், ரஷியாவிடம் இருந்து நாம் கச்சா எண்ணெய் வாங்குவதைசுட்டிக்காட்டிஇந்தியபொருட்களுக்கு50சதவீதவரிவிதித்துள்ளார். இதுகுறித்து பேசிய தேசியவாத காங்கிரஸ்(எஸ்.பி.) தலைவர் சரத்பவார், “இந்திய பொருட்களுக்கு 50 சதவீத வரி விதிப்பது ஒரு அழுத்தம் தரும் தந்திரம். நாட்டின் நலன்களை பாதுகாக்க இந்திய மக்களாகிய நாம் அரசை ஆதரிக்க வேண்டும்.

பிரதமர் மோடி அரசின் வெளியுறவு கொள்கை தோல்வி அடைந்துவிட்டதா என்று யூகிக்க விரும்பவில்லை. அமெரிக்க ஜனாதிபதி டிரம்பின் நடவடிக்கைகளை அவரது முதல் ஆட்சியிலும் பார்த்தோம். அவரை யாரும் கட்டுப்படுத்த முடியாது என்று நான் நினைக்கிறேன். அவர் தனது மனதில் தோன்றுவதையெல்லாம் உணர்ச்சிவசப்பட்டு பேசுகிறார்.

தற்போது நமது அண்டை நாடுகளுடன் நமக்கு இடைவெளி ஏற்பட்டு உள்ளது. பாகிஸ்தான் நமக்கு எதிராக உள்ளது. நேபாளம், வங்கதேசம், இலங்கை மற்றும் மாலத்தீவுகள் உள்ளிட்ட நாடுகளுக்கு நம்முடன் சுமுகமான உறவு இல்லை. நமது அண்டை நாடுகள் நம்மை விட்டு விலகி செல்கின்றன. இந்த பிரச்சினையை புறக்கணிக்க கூடாது. அவர்களுடன் உறவுகளை மேம்படுத்துவதில் பிரதமர் மோடி கவனம் செலுத்த வேண்டும்” என்றார்.

# கிண்டியில் உள்ள கலைஞர் நூற்றாண்டு மருத்துவமனையில் மு.க.ஸ்டாலின் திடீர் ஆய்வு

சென்னை, ஆக. 11

தமிழ்நாடு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று (9.8.2025) செங்கல்பட்டு மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில் கலந்துகொண்டு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் கட்டப்பட்டுள்ள தாம்பரம் – மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைக் கட்டடத்தை திறந்து வைத்து, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில், பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கினார்.

பிறகு, விழா முடிவுற்று இல்லம் செல்லும் வழியில், தமிழ்நாடு முதல்அமைச்சர், சென்னை கிண்டியில் உள்ள கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனைக்கு நேரில் சென்று திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது, மருத்துவமனையில் உள்ள அவரச சிகிச்சைப் பிரிவு உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளுக்கு சென்று ஆய்வு மேற்கொண்டு, இரத்த பரிசோதனை, சளி பரிசோதனை, சிறுநீர் பரிசோதனை, சதை பரிசோதனை உள்ளிட்ட அனைத்து விதமான பரிசோதனைகளையும் ஒரே இடத்தில் மேற்கொள்ளும் உயர்தர மத்திய ஆய்வகத்தையும் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.



அப்போது, மருத்துவமனை இயக்குநர், சிகிச்சை பெற்றுவரும் 121 புற மருத்துவ பயனாளிகள் (out patients), 326 உள் மருத்துவ பயனாளிகளுக்கு (In patients), மத்திய ஆய்வகத்தில் இன்றையதினம் இதுவரை 2390 பல்வேறு வகை பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து, அம்மருத்துவமனையில் கால் முறிவு ஏற்பட்டு சிகிச்சை பெற்று வந்த மருத்துவ பயனாளியிடம் அளிக்கப்பட்டுவரும் சிகிச்சை விவரங்கள் குறித்து, முதல்அமைச்சர் கேட்டறிந்தார். அப்போது, அவர் மருத்துவமனையில் சிகிச்சை நல்ல முறையில் அளிப்பதாகவும், நன்றாக கவனித்து கொள்வதாகவும் முதல்அமைச்சரிடம் தெரிவித்தார்.

பின்னர், பணியாளர்களின் வருகைப் பதிவேடு, உள் மற்றும் புற மருத்துவ பயனாளிகளின் சிகிச்சை விவர பதிவேடுகள், மருந்துகள் இருப்பு பதிவேடு போன்றவற்றை முதல்அமைச்சர் பார்வையிட்டு ஆய்வு செய்து, அதன் விவரங்கள் குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்தார்.

அத்துடன், மருத்துவமனையை தூய்மையாகவும், சுகாதாரமாகவும் பராமரிக்க வேண்டும் என்றும், இம்மருத்துவமனையில் மருத்துவ பயனாளிகளுக்கு தேவையான சிகிச்சைகளை காலதாமதமின்றி வழங்கிட வேண்டும் என்றும், அத்தியாவசிய மருந்துகள் தேவையான அளவிற்கு இருப்பு வைத்திருப்பதை உறுதி செய்திட வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது, பொதுப் பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர். பாலு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் ப. செந்தில்குமார், மருத்துவமனை இயக்குநர் மருத்துவர் பார்த்தசாரதி மற்றும் மருத்துவர் ரமேஷ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

# பாமக மகளிர் மாநாட்டில் 14 தீர்மானங்கள் நிறைவேற்றம்

மயிலாடுதுறை, ஆக. 11

பெண்ணுரிமையை காக்கவும், பெண்களுக்கு எதிரான வன்முறையை போக்கவும், பெண்கள் முன்னேற்றம் காணவும் பாமக மற்றும் வன்னியர் சங்கம் இணைந்து நடத்தும் மகளிர் பெருவிழா மாநாடு இன்று பூம்புகாரில் நடைபெற்று வருகிறது.




மாநாட்டில் பாமக நிறுவனர் டாக்டர் ராமதாஸ், சரஸ்வதி ராமதாஸ், ஜி.கே. மணி எம்.எல்.ஏ., வன்னியர் சங்க தலைவர் பு.தா. அருள்மொழி மற்றும் முன்னாள் மத்திய மந்திரிகள், முன்னாள் எம்.பி., எம்.எல்.ஏ.க்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டுள்ளனர்.

இந்த நிலையில், பாமக நிறுவனர் ராமதாஸ் தலைமையில் நடைபெற்று வரும் மகளிர் மாநாட்டில் பெண்களுக்கு பாதுகாப்பு, வேலைவாய்ப்பு, தமிழ்நாட்டில் பூரண மதுவிலக்கு உள்ளிட்ட 14 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. பாமக வன்னியர் சங்க மாநாட்டில் ராமதாசின் மகள் காந்திமதி முதல் தீர்மானத்தை வாசித்தார்.

தீர்மானங்கள் முழுவிவரம்:

1 பெண்களுக்கு பாதுகாப்பு வேண்டும்.

2 பெண்களுக்கு வேலைவாய்ப்பு அதிகரிக்க வேண்டும்.

3 பாலியல் வன்கொடுமை செய்பவரை இரும்புக்கரம் கொண்டு ஒடுக்கி, தமிழ்நாட்டில் பாலியல் வன்கொடுமையே இல்லை என்ற நிலையை உருவாக்க வேண்டும்.

4 தமிழ்நாட்டில் பூரண மதுவிலக்கு கொள்கையை அமல்படுத்த வேண்டும்.

5 தமிழ்நாட்டில் கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருள் இல்லாத மாநிலமாக மாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

6 நீட் தேர்வுக்கு செல்லும் மாணவிகள் சோதனை என்ற பெயரால் மன வேதனைக்கு உள்ளாக்கப்படுவதை தடுத்து நிறுத்த வேண்டும்.

7 பாலியல் வன்கொடுமைகள் அதிகரிக்கும் நிலையில், அதைதடுத்திட பெண்காவலர்கள் அதிக எண்ணிக்கையில் நியமிக்கப்பட வேண்டும்

8 100 நாள் வேலைவாய்ப்பு திட்டத்தில் பணிபுரிவோரின் ஊதியத்தையும், பணி நாட்களின் எண்ணிக்கையையும் உயர்ந்த வேண்டும்

9 மாணவிகள் தொழிற்கல்வி மற்றும் ஆராய்ச்சி கல்வி பெற கூடுதலாக மகளிர் பல்கலைக்கழகம் தனியாக உருவாக்கப்பட வேண்டும் 10 புற்றுநோயால் பாதிக்கப்படும் அனைத்து பெண்களுக்கும் இலவச சிகிச்சை அளிக்கப்பட வேண்டும்.

11 வன்னியர்களுக்கு 10.5% இடஒதுக்கிட்டை உடடினயாக நடைமுறைப்படுத்த வேண்டும். அனைத்து சமுதாயத்திற்கும் உரிய இடஒதுக்கீட்டை வழங்கவண்டும்.

12 சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பை உடனடியாக நடத்த வேண்டும்

13 நெல்லுக்கு கூடுதல் விலை நிர்ணயம் செய்யப்பட வேண்டும். அதேபோல் கூடுதல் நெல் கொள்முதல் சேமிப்புக் கிடங்குகள் அமைக்கப்பட வேண்டும்.

14 பூம்புகார் மீன்பிடித் துறைமுக மீனவர்கள் உள்ளிட்ட தமிழ்நாடு மீனவர்களின் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும்.

# ராகுல்காந்தியின் குற்றச்சாட்டுக்கு என்ன பதில்? தேர்தல் ஆணையத்துக்கு கி.வீரமணி கேள்வி

சென்னை, ஆக. 11

திராவிட கழக தலைவர் கி.வீரமணி வெளியிட்டுள்ள எக்ஸ் தளப்பதிவில் கூறப்பட்டிருப்பதாவது: ‘கவர்தல்’ என்னும் தமிழ்ச்சொல்லுக்கு, வசப்படுத்துதல், விரும்புதல், பெற்றுக்கொள்ளுதல் என்னும் பொருள்களுடன், கொள்ளையிடல், திருடல் என்றும் பொருள்கள் உண்டு. “வாக்குகளைக் கவர்தல்” என்பதைப் பாரதிய ஜனதா கட்சி இரண்டாம் வகையில் புரிந்துகொண்டுள்ளதோ?. சந்தேகத்துக்குரிய வகையில் இந்தியத் தேர்தல்கள் நடைபெறுவதாகக் கடந்த சில ஆண்டுகளாகக் கடுமையான குற்றச்சாட்டுகள் பல திசைகளில் இருந்தும் எழுந்து வருகின்றன. மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள், வாக்கு எண்ணும் முறைகள், தேர்தல் தேதி அறிவிப்புகள், தேர்தல் ஆணையர்களின் நியமனம், அரசியல் கட்சிகளின் அங்கீகாரம், கட்சி உடைப்புகளின் போது தேர்தல் ஆணையம் நடந்துகொள்ளும் முறை என்று பலவற்றின் மீதும் சந்தேகங்களும், அதற்கான நியாயமான காரணங்களும் இருப்பது இந்தியாவின் ஜனநாயகத்திற்கு ஏற்பட்டுள்ள ஆபத்தாகும்.

அரசியலுக்கும், அதிகாரத்துக்கும் அப்பாற்பட்டு இருக்க வேண்டிய சுதந்திரமான அமைப்பாக இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி உருவாக்கப்பட்டது இந்தியத் தேர்தல் ஆணையம். ஆனால், அதன் செயல்பாடுகள் சந்தேகத்துக்குரிய வகையில் இருப்பது ஜனநாயகத்துக்கு உகந்தது அல்ல. இந்தச் சந்தேகங்களை உறுதி செய்யும் வகையில், வெளிப்படையான குற்றச்சாட்டை இந்தியாவைப் பல்லாண்டுகள் ஆட்சி செய்த கட்சியும், தற்போதைய எதிர்க்கட்சியுமான காங்கிரஸ் கட்சியின் இளந்தலைவரும், நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான ராகுல் காந்தி ஆதாரங்களுடன் முன்வைத்திருக்கிறார். 7.8.2025 அன்று காங்கிரஸ் கட்சியின் தலைமை யகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது, பெங்களூரு மத்திய நாடாளுமன்றத் தொகுதியின் ஒரு பகுதியான மகாதேவ்புரா சட்டப்பேரவைத் தொகுதியின் வாக்காளர் பட்டியலில் செய்யப்பட்டுள்ள மோசடியைக் காட்சிப் பட விளக்கத்துடன் தெளிவுபடுத்தினார் ராகுல்காந்தி. அந்த ஒரு தொகுதியில் மட்டுமே 1,00,250 வாக்குகள் திருடப்பட்டிருப்பதாக (Vote chori) அவர் வெளிப்படையாகக் குற்றம் சாட்டியுள்ளார். புதிய வாக்காளர்கள் என்ற பெயரில் போலி வாக்காளர்களைச் சேர்த்தல், ஒரே அறை கொண்ட முகவரியில், யாரும் வசிக்காத வீட்டில் எண்ணற்ற வாக்குகள் பதிவு, ஒளிப்படங்கள் இல்லாமல் வாக்காளர் பதிவு, ஒரே நபருக்கு ஒன்றுக்கும் மேற்பட்ட வாக்குச் சாவடிகளில் வாக்கு, ஒரே வாக்குச்சாவடியில் ஒருவருக்கு இரண்டு வாக்கு, ஒரே நபருக்கு வெவ்வேறு மாநிலங்களில் வாக்கு இப்படி பல்வேறு வகைகளில் முறைகேடுகள் செய்யப்பட்டுள்ளன’’ என்று அவர் இந்திய ஜனநாயகத்துக்குப் பேராபத்து விளைவிக்கும் அணுகுண்டை அம்பலப்படுத்தியுள்ளார். இந்தியாவில் ஆட்சியைப் பிடிக்க எல்லா தொகுதிகளிலும் இத்தகைய மோசடிகளைச் செய்ய வேண்டியதில்லை. தங்களுக்கு முழு ஆதரவு உள்ள தொகுதிகளை விட்டுவிடலாம். கடுமையான எதிர்ப்பு கொண்ட தொகுதிகளிலும் இத்தகைய மோசடிகளைச் செய்தால் அம்பலப்பட்டுவிடுவோம் என்று கருத இடம் உண்டு. ஆனால், வெற்றியை முடிவு செய்ய இயலாத தொகுதிகளை கடும் போட்டி நிலவும் தொகுதிகளை முன்கூட்டியே அறிந்து, அதில் இத்தகைய மோசடிகளைச் செய்தாலே போதும் என்று பா.ஜ.க. கணக்கிட்டிருக்கக் கூடும்.

தேர்தல் முன் கணிப்புகளின் அடிப்படையில் ஆட்சி அமைக்க இரண்டு கட்சிகளின் வேறுபாடுகளைக்கடக்கஎவ்வளவுதொகுதிகள்தேவையோ அவற்றில் மட்டும் ‘தனிக் கவனம்’ செலுத்தி, வாக்காளர் பட்டியலில் மோசடி செய்தாலே போதுமானது என்பதே பா.ஜ.க.வினரின் கணக்கு! இதைத் தான் ராகுல் காந்தி அவர்களும் சரியாக வெளிப்படுத்தியுள்ளார். பாரதிய ஜனதா கட்சி, இத்தகைய கணக்குகளை ஆட்சியின் கண்களையும், காதுகளையும் பயன்படுத்தி அறிந்து, அவற்றில் மட்டும் ‘கவனம்’ செலுத்துவதைத் தனது தேர்தல் உத்தியாக வைத்துள்ளது. ராகுல் காந்தியின் ஆதாரப்பூர்வமான குற்றச்சாட்டுக்கு என்ன பதில்?. பா.ஜ.க.வின் தில்லுமுல்லுகளை மக்கள் மத்தியில் அம்பலப்படுத்துவோம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.




# வெளிநாடு செல்லும் நண்பரை வழி அனுப்ப சென்றபோது சோகம்; 2 பேர் பலி

திருச்சி, ஆக. 11

லால்குடி பகுதியைச் சேர்ந்த ஒரு வாலிபர் இன்று வெளிநாடு வேலைக்கு செல்ல திட்டமிட்டு இருந்தார். அதைத்தொடர்ந்து இன்று காலை ஒரு காரில் அந்த வாலிபர் திருச்சி விமான நிலையத்துக்கு புறப்பட்டார். அவரை வழி அனுப்புவதற்காக அவரின் நண்பர்கள் மற்றும் உறவினர்கள் என 6 வாலிபர்கள் காரில் உடன் சென்றனர்.

இந்தக் கார் காலை 9.50 மணி அளவில் திருச்சி லால்குடி மெயின் ரோட்டில் சரஸ்வதி கல்லூரி அருகே வந்த போது, எதிரே வந்த மோட்டார் சைக்கிளுடன் எதிர்பாராத விதமாக மோதியது. இந்த விபத்தில் டிரைவர் கட்டுப்பாட்டை இழந்த கார்சாலையோரம்கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இதில் காரில் பயணம் செய்த 2 வாலிபர்கள் பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும் காரில் பயணம் செய்த 5 பேர் பலத்த காயமடைந்தனர். இதில் ஒருவரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. விபத்து தொடர்பாக வழக்குப்பதிவு செய்த போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ.3 லட்சமும், பலத்த காயம் அடைந்தவர்களுக்கு தலா ரூ.1 லட்சமும், லேசான காயமடைந்தவர்களுக்கு ரூ.50 ஆயிரம் முதல் அமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க உத்தரவிட்டுள்ளார்.

# ராமநாதபுரம்: ஸ்பீக்கர் விழுந்ததில் 6 வயது சிறுமி பலி



ராமநாதபுரம், ஆக. 11

ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி அருகே கோரைக்குளத்தில்கோவில் திருவிழா நடைபெற்றது. இந்த திருவிழாவை முன்னிட்டு பைக் செட்கள் ஆங்காங்கே கட்டப்பட்டு இருந்தது.

இந்த நிலையில் மைக் செட் உரிமையாளர் வீரகுமார் என்பவர் வீட்டின் வெளியே பெரிய அளவிலான ஸ்பீக்கர்களை அடுக்கி வைத்துள்ளார். அதன் கயிற்றை சுகவதி என்றசிறுமிஅவிழ்த்ததால், குழந்தையின் மீதே ஸ்பீக்கர் விழுந்துள்ளது.

இதில் சிறுமி உடல் நசுங்கி பரிதாப உயிரிழந்துள்ளார். ஸ்பீக்கர் விழுந்ததில் 6 வயது சிறுமி உயிரிழந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# இலங்கை கடற்படையால் 8 பேர் கைது: இரு நாட்டு மீனவர்கள் சந்திப்புக்கு ஏற்பாடு செய்ய வேண்டும் செல்வப்பெருந்தகை



சென்னை ஆக. 11

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப்பெருந்தகை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

தமிழ்நாட்டு மீனவர்கள் 8 பேரை இன்று இலங்கை கடற்படை கைது செய்து, அவர்களின் ஒரு படகையும் பறிமுதல் செய்துள்ளனர். கடந்த 6ம் தேதி கற்பிட்டி பகுதியில் விசைப்படகு மீனவர்கள் 10 பேரும், கச்சத்தீவு அருகே நாட்டுப்படகு மீனவர்கள் 4 பேரும் படகுகளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர். மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் தாக்குதல் நடத்துவதும், அவர்கள் விசைப்படகுகளை பறிமுதல் செய்வதும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அவர்களின் இந்த அராஜக போக்குக்கு வன்மையான கண்டனங்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழக மீனவர்களை இலங்கை கடற்படை கைது செய்து அட்டூழியம் செய்வது தொடர்ந்து நீடித்துக் கொண்டேதான் இருக்கிறது. இதற்கு முற்றுப்புள்ளி வைக்குமாறு மத்திய அரசிடம் தமிழ்நாடு அரசு தொடர்ந்து வலியுறுத்தி வந்தாலும், இதுவரையில் எந்த முடிவும் எட்டவில்லை. மேலும், இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி மத்திய வெளியுறவுத்துறை மந்திரி ஜெய்சங்கருக்கு முதல்வர் மு.க. ஸ்டாலின்கடந்த மாதம் கடிதம் எழுதியும், நேரில் சென்று கோரிக்கை வைத்தும் உறுதியான, நிலையான எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. மத்திய அரசு உறுதியான நடவடிக்கை எடுத்திருந்தால் இலங்கை கடற்படையின் அத்துமீறல்கள் நிகழ்ந்திருக்காது.

கடந்த மே மாதம் பிரதமர் மோடி இலங்கை சென்றபோது, மீனவர்கள் பிரச்சனையின் முக்கிய அம்சங்கள் குறித்து இருதரப்பும் விரிவாக ஆலோசனை செய்ததாகக் கூறப்பட்டது. அதை உடனடியாக நடைமுறைக்கு கொண்டு வந்து இருநாட்டு மீனவர்கள் சந்திப்பை ஏற்பாடு செய்ய வேண்டும். மேலும், மீனவர்களின் உரிமையை பாதுகாக்க கடல் உரிமைச் சட்டம் கொண்டு வந்து மீனவர்களின் பாதுகாப்பை மத்திய அரசு உறுதி செய்ய வேண்டும். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# சிறுமியை கடத்திச் சென்று பலாத்காரம்: பெயிண்டருக்கு 20 ஆண்டுகள் சிறை

திண்டுக்கல் ஆக. 11

திருச்சியை சேர்ந்தவர் இஸ்மாயில் (37 வயது). பெயிண்டர். கடந்த 2024ம் ஆண்டு இவர், வேலை தேடி திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை பகுதிக்கு வந்தார். அப்போது 16 வயது சிறுமியுடன் அவருக்கு பழக்கம் ஏற்பட்டது. ஒருகட்டத்தில் சிறுமியை திருமணம் செய்வதாக ஆசை வார்த்தைக்கூறி இஸ்மாயில் கடத்திச் சென்று விட்டார். இதற்கிடையே சிறுமி மாயமானது குறித்து அறிந்த பெற்றோர் நிலக்கோட்டை போலீசில் புகார் கொடுத்தனர்.

அதன்பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர். விசாரணையில், மதுரை, திருச்சி உள்ளிட்ட பல்வேறு ஊர்களுக்கு சிறுமியை கடத்திச்சென்று இஸ்மாயில் பாலியல் பலாத்காரம் செய்தது தெரியவந்தது.

பின்னர் அவர் சிறுமியுடன் நிலக்கோட்டை புறநகர் பகுதியில் பதுங்கி இருப்பது குறித்து தகவலறிந்த போலீசார், அவரை கைது செய்தனர். மேலும் அவரிடம் இருந்து சிறுமியையும் மீட்டு காப்பகத்தில் ஒப்படைத்தனர். பின்னர் இஸ்மாயில் மீது திண்டுக்கல் விரைவு மகிளா கோர்ட்டில் வழக்கு தொடர்ந்தனர். வழக்கை நீதிபதி சரண் விசாரித்தார். அரசு தரப்பில் வக்கீல் ஜோதி ஆஜராகி வாதாடினார்.

இந்த வழக்கு விசாரணை நிறைவடைந்தது. குற்றம் சாட்டப்பட்ட இஸ்மாயிலுக்கு இந்திய தண்டனை சட்டம் 366ன்படி (சிறுமியை கடத்திச்செல்லுதல்) 4 ஆண்டுகள் சிறை தண்டனை, ரூ.5 ஆயிரம் அபராதமும், போக்சோ சட்டத்தின் கீழ் 20 ஆண்டுகள் சிறை தண்டனை, ரூ.5 ஆயிரம் அபராதமும் விதித்து நீதிபதி சரண் தீர்ப்பளித்தார். மேலும் தண்டனையை ஏக காலத்தில் அவர் அனுபவிக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டார்.

# மாணவிக்கு பாலியல் புகார் எதிரொலி: அரசு பள்ளி ஆசிரியர் பணியிடை நீக்கம்




கன்னியாகுமரி ஆக. 11

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் மாநகர பகுதியில் ஒரு அரசு மேல்நிலைப்பள்ளி உள்ளது. இந்த பள்ளியில் ஏராளமான மாணவ, மாணவிகள் படித்து வருகிறார்கள். அங்கு தமிழ் ஆசிரியராக சுரேஷ்குமார் என்பவர் பணிபுரிந்து வந்தார். கடந்த மார்ச் மாதம் பள்ளியில் 10ம் வகுப்பு படித்த ஒரு மாணவிக்கு ஆசிரியர் சுரேஷ்குமார் பாலியல் தொந்தரவு கொடுத்துள்ளார். இது குறித்து மாணவி, பள்ளி நிர்வாகத்திடம் புகார் அளித்தார்.

அந்த புகாரின் பேரில் மாவட்ட கல்வி அதிகாரிகள் மாணவியிடம் விசாரணை நடத்தினர். இதற்கிடையே ஆசிரியர் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி பா.ஜ.க. சார்பில் கண்டன ஆர்ப்பாட்டமும் நடத்தப்பட்டது.

இந்த நிலையில் பாலியல் புகாருக்கு ஆளான சுரேஷ்குமாரை பணியிடைநீக்கம்செய்து முதன்மை கல்வி அதிகாரி உத்தரவிட்டுள்ளார்.

# நாகலாந்து கவர்னர் இல.கணேசனுக்கு 2வது நாளாக மருத்துவமனையில் சிகிச்சை




சென்னை, ஆக. 11

நாகாலாந்து மாநிலத்தின் கவர்னராக பதவி வகித்து வருபவர் இல.கணேசன். இவர், சென்னையில் உள்ள தனது வீட்டில் நேற்று திடீரென மயங்கி விழுந்தார். இதில் தலையில் பலத்த காயமடைந்த இல.கணேசனை அவருடைய குடும்பத்தினர் மீட்டு சென்னை ஆயிரம் விளக்கு பகுதியில் உள்ள அப்பல்லோ ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக சேர்த்தனர்.

ஆஸ்பத்திரியில் மயங்கிய நிலையில் அனுமதிக்கப்பட்ட இல.கணேசன், தீவிரசிகிச்சைபிரிவில் அனுமதிக்கப்பட்டார். அவருக்கு டாக்டர்கள் குழுவினர் தீவிர சிகிச்சை அளித்து வருகின்றனர். இந்தநிலையில்தொடர்ந்து 2வது நாளாக இல.கணேசன் தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார்.

# தொலைநோக்குப் பார்வையுடனும் தமிழ்நாடு அரசின் புதிய கல்விக்கொள்கை உருவாக்கப்பட்டுள்ளது கமல்ஹாசன் பாராட்டு



சென்னை, ஆக. 11

மத்திய கல்விக் கொள்கையை ஏற்கமாட்டோம் என்று தமிழக அரசு தொடர்ந்து கூறிவரும் நிலையில், கல்வி வளர்ச்சிக்கு வழங்கும் நிதியை மத்திய அரசு நிறுத்தி வைத்துள்ளது. இந்த நிலையில், மாநில கல்விக் கொள்கையை முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று வெளியிட்டார். இந்த நிலையில் தமிழக அரசின் கல்விக்கொள்கை, சமத்துவத்தையும் சமூகநீதியையும் சேர்த்தே போதிக்கிறது என்று மாநிலங்களவை எம்.பி.யும், நடிகருமான கமல்ஹாசன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள பதிவில், "வசதி படைத்தவர்களுக்குக் கிடைப்பதை விட தரமான கல்வி எளிய பின்புலத்தைச் சேர்ந்த மாணவர்களுக்குக் கிடைக்க வேண்டுமெனும் நல்லெண்ணத்துடனும், மாறிவரும் உலகின் புதிய சவால்களை எதிர்கொள்ளத் தேவையான திறன்களுடன் நமது மாணவர்களை உருவாக்க வேண்டும் எனும் தொலைநோக்குப் பார்வையுடனும் தமிழ்நாடு அரசின் புதிய கல்விக்கொள்கை உருவாக்கப்பட்டிருப்பது மகிழ்ச்சியளிக்கிறது.

பல்வேறு சிறப்பம்சங்களுடன் உருவாகியுள்ள இந்தக் கல்விக் கொள்கை, சமத்துவத்தையும் சமூகநீதியையும் சேர்த்தே போதிக்கிறது. குறிப்பாக மாணவர்களை அச்சத்திலேயே ஆழ்த்தி வைக்கும் தேவையற்ற பொதுத்தேர்வுகள் நீக்கப்பட்டிருப்பதும், அநீதியான நுழைவுத்தேர்வுகளுக்கு எதிரான அம்சங்கள் இடம்பிடித்திருப்பதும், இருமொழிக்கொள்கையே தொடரும் என அறிவிக்கப்பட்டிருப்பதும் பாராட்டுக்குரியவை.

'அனைவருக்கும் தரமான கல்வி' எனும் இலக்கோடு செயலாற்றி வரும் தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலினையும், பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழியையும், தமிழ்நாடு மாநிலக் கல்விக் கொள்கையை வடிவமைத்த டெல்லி ஐகோர்ட்டு முன்னாள் தலைமை நீதிபதி த.முருகேசன் தலைமையிலான குழுவினரையும் மனமாரப் பாராட்டுகிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

# இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்ட மீனவர்களை விடுவிக்கக்கோரி ராமேசுவரத்தில் சாலைமறியல்



ராமநாதபுரம் ஆக. 11

ராமநாதபுரம் மாவட்டம் ராமேசுவரத்தை சேர்ந்த 7 மீனவர்கள் இன்று அதிகாலை கச்சத்தீவு அருகே வடக்கு மன்னார் கடற்பரப்பில் மீன்பிடித்துக்கொண்டிருந்தனர். அப்போது அங்கு வந்த இலங்கை கடற்படையினர் எல்லை தாண்டி மீன் பிடித்ததாக 7 மீனவர்களையும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட 7 மீனவர்களையும் விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி மத்திய வெளியுறவுத்துறை மந்திரி ஜெய்சங்கருக்கு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

இந்நிலையில், இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்ட ராமேசுவரம் மீனவர்களை உடனடியாக விடுவிக்கக்கோரி மீனவர்களின் உறவினர்கள் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். தங்கச்சிமடம் அரசு மருத்துவமனை முன் சாலையில் அமர்ந்து மீனவர்கள், உறவினர்கள் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் அப்பகுதியில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

# தண்டவாளத்தை கடக்க முயன்றபோது ரெயில் மோதி பள்ளி மாணவன் உயிரிழப்பு

தேனி ஆக. 11

தேனி மதுரை சாலையில் ரெயில்வே தண்டவாளத்தையொட்டி உள்ள அண்ணாநகர் பகுதியைச் சேர்ந்தவர் வடிவேல். இவர், ஒரு பேக்கரியில் மாஸ்டராக வேலை பார்த்து வருகிறார். அவரது மகன் கோகுல் (14 வயது) பள்ளியில் 8ம் வகுப்பு படித்து வந்தான். சில மாதங்களாக கோகுல் பள்ளிக்கு சரிவர செல்லாமல் இருந்து வந்ததாக கூறப்படுகிறது.

இந்த நிலையில் நேற்று பகலில் கோகுல் கடைக்கு செல்வதற்காக அப்பகுதியில் உள்ள ரெயில்வே தண்டவாளத்தை கடக்க முயன்றான். அப்போது அந்த வழியாக தேனியில் இருந்து மதுரை நோக்கி தண்டவாளத்தை ஆய்வு செய்வதற்கான ரெயில் என்ஜின் சென்று கொண்டு இருந்தது. எதிர்பாராதவிதமாக அந்த ரெயில் என்ஜின், கோகுல் மீது மோதியது. இதில் படுகாயம் அடைந்த மாணவன் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தான் இந்த சம்பவம் தொடர்பாக மதுரை ரெயில்வே போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# எம்ஜிஆரை அவமதிக்கும் நோக்கத்தில் பேசவில்லை: திருமாவளவன் விளக்கம்



திருச்சி, ஆக. 11

திருச்சி விமான நிலையத்தில் விசிக தலைவர் திருமாவளவன் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது: தமிழக அரசியல் கடந்த 60 ஆண்டுகளாக எவ்வாறு இயங்கி வருகிறது, அது எவ்வாறு கட்டமைக்கப்பட்டுள்ளது என்ற உரையில் எம்ஜிஆர் பற்றி குறிப்பிட்டேன். எம்ஜிஆர் மீதும், ஜெயலலிதா மீதும் எனக்கு அதீதமான மதிப்பு உண்டு. அவர்களை பலமுறை மனம் திறந்து பாராட்டியுள்ளேன்.

தமிழ்நாடு அரசியல் கலைஞரை மையப்படுத்தி, எப்படி கலைஞர் எதிர்ப்பு அரசியலாக மாறியது என கலைஞர் நினைவேந்தல் நிகழ்ச்சியில் நான் பேசினேன். எம்ஜிஆரை அவமதிக்கும் நோக்கம் என்னிடம் இல்லை. எம்ஜிஆர், ஜெயலலிதாவை ஒரு ஜாதிக்குள் சுருக்க முடியாது. எம்ஜிஆரை ஒரு சாதிக்குள் நான் சுருக்கவில்லை. அது தவறாக புரிந்து கொள்ளப்பட்டுள்ளது" என்றார்.

முன்னதாக, எம்ஜிஆர் குறித்த பேச்சுக்கு திருமாவளவனுக்கு கண்டனம் தெரிவித்த அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, 'அரசியலில் இருந்து திருமாவளவன் காணாமல் போய் விடுவார்,' என்று விமர்சித்துஇருந்தார். இதற்கு பதிலளிக்கும் விதமாக திருச்சி விமான நிலையத்தில் திருமாவளவன் செய்தியாளர்களிடம் பேசியுள்ளார்.

# திருச்சியில் சிற்றுந்து கவிழ்ந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்துக்கு நிதியுதவி: மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை, ஆக. 11

லால்குடியிலிருந்து திருச்சி நோக்கி சென்று கொண்டிருந்த சிற்றுந்து கவிழ்ந்து ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ.3 லட்சம் நிதியுதவி வழங்கிட முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார். இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடியிலிருந்து திருச்சி நோக்கி சென்று கொண்டிருந்த TN48AB8168 என்ற பதிவெண் கொண்ட சிற்றுந்து இன்று (09.08.2025) காலை 9.30 மணி அளவில் கட்டுப்பாட்டை இழந்து நிலைதடுமாறி தடம்புரண்ட விபத்தில், லால்குடி, நன்னிமங்கலத்தைச்சேர்ந்த அரவிந்த் (வயது 20), லால்குடி முஸ்லிம் தெருவைச் சேர்ந்த சாதிக்பாட்சா (வயது 19), லால்குடியைச் சேர்ந்த விஸ்வநாதன் (வயது 56) ஆகிய மூன்று நபர்கள் உயிரிழந்தனர் என்ற துயரகரமான செய்தியறிந்து மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

மேலும் இவ்விபத்தில் பலத்த காயமடைந்த லால்குடியைச் சேர்ந்த நபில் (வயது 20), அப்துல் ரகுமான் (வயது 21), ஏகலைவன் (வயது 21), முஸ்தபா (வயது 20), மேலவாளாடியைச் சேர்ந்த கார்த்திகேயன் (வயது 21), நன்னிமங்கலத்தைச் சேர்ந்த ஆனந்த் (வயது 20), புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி, வடகரையைச் சேர்ந்த கணபதி (வயது 19) ஆகிய ஏழு நபர்கள் மற்றும் லேசான காயமடைந்த லால்குடியைச் சேர்ந்த குகன் (வயது 20), திலீப் (வயது 19), ஆஷிக் (வயது 18) ஆகிய மூவரும் திருச்சிராப்பள்ளி மகாத்மா காந்தி நினைவு அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. அவர்களுக்கு தனி மருத்துவக் குழுவினரால் சிறப்பான சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்விபத்தில் உயிரிழந்தவர்களின் பெற்றோருக்கும் உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா மூன்று லட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்தவர்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாயும், லேசான காயமடைந்தவர்களுக்கு ஐம்பதாயிரம் ரூபாயும் முதல்அமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிட உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சொல்வதற்கு ஏதுமில்லை: அன்புமணி நடத்திய பொதுக்குழு குறித்த கேள்விக்கு ராமதாஸ் பதில்



விழுப்புரம், ஆக. 11

பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாசுக்கும், அவருடைய மகன் டாக்டர் அன்புமணி ராமதாசுக்கும் இடையே கடந்த சில மாதங்களாக கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளது. இந்தநிலையில், கட்சியின் பொதுக்குழுவை இன்று (சனிக்கிழமை) மாமல்லபுரத்தில் கூட்டுவதாக அன்புமணி அறிவித்தார். இந்த பொதுக்குழுவிற்கு தடை கேட்ட ராமதாசின் மனுவை சென்னை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. இதையடுத்து, திட்டமிட்டபடி அன்புமணி தலைமையில் பொதுக்குழு நடைபெற்றது. இந்த பொதுக்குழுவில் 19 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. பாமக தலைவர் அன்புமணியின் பதவிக்காலம் மேலும் ஒரு ஆண்டு காலம் நீட்டித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்த நிலையில், அன்புமணி நடத்திய பொதுக்குழு குறித்து செய்தியாளர்கள், பாமக நிறுவனர் ராமதாஸிடம் கேள்வி எழுப்பினர். இதற்கு பதிலளித்த ராமதாஸ், "சொல்வதற்கு ஏதுமில்லை" என பதிலளித்துவிட்டு சென்றார்.

# மாநிலக் கல்விக் கொள்கை தன்னம்பிக்கை, சுய திறனை ஊக்குவிக்கும்: முத்தரசன் வரவேற்பு



சென்னை, ஆக. 11

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயலாளர் முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

தமிழ்நாடு அரசின் மாநிலக் கல்விக் கொள்கையை நேற்று முதல்அமைச்சர் வெளியிட்டுள்ளார். மாநில கல்விக் கொள்கை தமிழ்நாட்டின்தனித்துவப் பண்புகளை உள்வாங்கி உருவாக்கப்பட்டுள்ளது. மொழிக் கொள்கை குறித்து விரிவாக ஆய்வு செய்து இரு மொழிக் கொள்கையை மீண்டும் உறுதி செய்துள்ளது. அனைத்து வகைப் பள்ளிகளிலும் 10ம் வகுப்பு வரை தமிழ்மொழி கட்டாயம் பயிற்றுவிக்க வேண்டும் என பணித்துள்ளது.

மூன்று, ஐந்து, எட்டு ஆகிய வகுப்புகளுக்கும், பிளஸ் 1 வகுப்புக்கும் பொதுத்தேர்வு நீக்கப்பட்டிருப்பது வளர்ந்துவரும்குழந்தைகள் அச்சம் இல்லாமல், கற்கும் ஆர்வத்தை அதிகரிக்க செய்யும். அதே சமயம், தனியார் கல்வி நிறுவனங்களில் பிளஸ் 1 வகுப்புக்கான பாடங்கள் கற்பித்தலை கைவிட்டு, பிளஸ் 2 வகுப்பில் மட்டுமே கவனம் செலுத்தி வந்த, பழைய நடைமுறையை தடுக்க என்ன வழிவகை செய்யப்பட்டுள்ளது என்பதை தெளிவுபடுத்த வேண்டும். சமச்சீர் கல்விக் கோட்பாடு வலியுறுத்தப்பட்டு வரும் நிலையில், தகைசால் பள்ளிகள் என்ற முறை பாகுபாடு ஏற்படுத்த அனுமதிக்கக் கூடாது.

தேசியக் கல்விக் கொள்கையை ஏற்றுக் கையெழுத்துப்போட்டால்தான்மாநில அரசுக்கான கல்வி நிதி வழங்க முடியும் என மத்திய அரசு நிர்பந்தித்து வரும்போது, கல்வி தொடர்பான அதிகாரங்கள் முழுமையும் மாநில அரசுக்கு மாற்றப்பட வேண்டும் என்பதே சரியாகும். இந்தக் கோரிக்கையை மக்கள் இயக்கமாக கட்டமைக்க வேண்டும். அதேசமயம், நீட், ஜேஇஇ போன்ற நடைமுறையில் இருந்து வரும் போட்டித் தேர்வுகளை எதிர்கொள்வதில் முன்னணி வகித்து வரும் மாணவர் திறனும் குறைந்து விடாமல் இருப்பது அவசியமாகும்.

அறிவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறையின் வியக்கத்தக்க வளர்ச்சிக்கு தக்கபடி, திறனை வளர்த்து தகவமைத்துக் கொள்ளும் படைப்பாற்றல், சிந்தனை, நிதியியல் சார் கல்வி, எண்ம நுட்பங்கள், சுற்றுச்சூழல், உலகளாவிய குடியுரிமை போன்ற பல்வேறு அம்சங்களையும் உள்வாங்கி, உருவாக்கப்பட்டுள்ள மாநிலக் கல்விக் கொள்கை, இளைய தலைமுறையினர் எதிர்காலம் முன்வைக்கும் சவால்களை எளிதில் எதிர்கொள்ளும் திறனையும், தன்னம்பிக்கையினையும் ஊக்கப்படுத்தும் திசை வழியில் அமைந்துள்ளதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வரவேற்கிறது. இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

## விவேகானந்தர் மண்டபம் செல்ல ஆன்லைனில் பயணச்சீட்டு முன்பதிவு

கன்னியாகுமரி, ஆக .11

உலக புகழ்பெற்ற சுற்றுலா தலமான கன்னியாகுமரிக்கு வரும் சுற்றுலா பயணிகள் கடலின் நடுவே உள்ள விவேகானந்தர் மண்டபம், திருவள்ளுவர்சிலை ஆகியவற்றை படகில் சென்று பார்ப்பது வழக்கம். இதற்காக பூம்புகார் கப்பல் போக்குவரத்து கழகம் சார்பில் படகு போக்குவரத்து நடைபெற்று வருகிறது.

இந்த படகில் பயணம் செய்ய ஆன்லைன் மூலம் முன்பதிவு செய்து பயணச்சீட்டு பெறும் முறை நேற்று முதல் தொடங்கப்பட்டது. இதன்தொடக்க நிகழ்ச்சி கன்னியாகுமரி பூம்புகார் கப்பல் போக்குவரத்து கழக வளாகத்தில் நடந்தது. நிகழ்ச்சியில் பால்வளத் துறை அமைச்சர் மனோ தங்கராஜ் ஆன்லைன் மூலம் பயணச்சீட்டு பதிவு செய்யும் வசதியை



தொடங்கி வைத்து பேசினார்.


அப்போது அவர்கூறுகையில், சுற்றுலா பயணிகள் www.psckfs.tn.gov.in என்ற இணையதளம் வாயிலாக நுழைவு சீட்டை முன்பதிவு செய்து கொள்ளலாம். முன்பதிவு செய்தவர்களுக்கு செல்போனில் பயணத்திற்கான நாள், நேரம் உள்ளிட்ட அனைத்து தகவல்களும் குறுஞ்செய்தியாக அனுப்பப்படும். நாள் ஒன்றுக்கு 3 ஆயிரத்து 600பேர் ஆன்லைன்மூலம் பயணச்சீட்டு பெற்று படகில் பயணம் செய்யலாம் என்றார்.

## தி.மு.க. இலக்கிய அணி தலைவராக அன்வர்ராஜா நியமனம் துரைமுருகன் அறிவிப்பு

சென்னை, ஆக. 11

அ.தி.மு.க. அமைப்பு செயலாளரும், முன்னாள் அமைச்சருமான அ. அன்வர்ராஜா, சமீபத்தில் தி.மு.க.வில் இணைந்தார். தற்போது அவருக்கு தி.மு.க.வில் இலக்கிய அணி தலைவர் பதவி வழங்கப்பட்டுள்ளது. இது குறித்து, தி.மு.க. பொதுச் செயலாளர் துரைமுருகன் வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:

புலவர் இந்திரகுமாரி வகித்து வந்த தி.மு.க. இலக்கிய அணி தலைவர் பொறுப்பில் முன்னாள் அமைச்சர் அ. அன்வர் ராஜா நியமிக்கப்படுகிறார்.



தி.மு.க. சட்ட திட்ட விதி 31, பிரிவு 10ன்படி தி.மு.க. இலக்கிய அணி தலைவராக முன்னாள் அமைச்சர் அ. அன்வர்ராஜா தலைமை கழகத்தால் நியமிக்கப்படுகிறார். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## அவசர பராமரிப்பு பணி: தூத்துக்குடி 1வது ரெயில்வே கேட் இன்று தற்காலிகமாக மூடல்

தூத்துக்குடி ஆக. 11

தெற்கு ரெயில்வே வெளியிட்ட அறிவிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:

தூத்துக்குடியில் மட்டக்கடை மற்றும் டபிள்யூஜிசி சாலையை இணைக்கும் 1வது ரெயில்வே கேட்டில் அவசர பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. இதன் காரணமாக இன்று (9.8.2025, சனிக்கிழமை) இரவு 10.30 மணி முதல் நாளை(10.8.2025, ஞாயிற்றுக்கிழமை) காலை 5 மணி




வரைமூடப்படும். எனவே வான ஓட்டிகள் சாலை போக்குவரத்துக்கு அருகிலுள்ள சர்வீஸ் சாலையை பயன்படுத்த வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## தூத்துக்குடியில் மனைவியை இரும்பு கம்பியால் தாக்கிய கணவர் கைது

தூத்துக்குடி ஆக. 11

தூத்துக்குடி, தாளமுத்துநகர், ஜேசு நகரைச் சேர்ந்த பெரியசாமி மகன் நட்டார் (வயது 55), கொத்தனாராக வேலை பார்த்து வருகிறார். இவரது மனைவி முத்தம்மாள்(45).

இந்த தம்பதியருக்கு 4 குழந்தைகள் உள்ளனர். நட்டார் தினசரி மது குடித்துவிட்டு வந்து மனைவியிடம் தகராறு செய்து வந்துள்ளார்.

இந்த நிலையில் நேற்று இரவு குடி போதையில் வீட்டுக்கு வந்த நட்டார், மனைவி முத்தம்மாளிடம் தகராறு செய்து அவரை இரும்பு கம்பியால் தலை




யில் சரமாரியாக தாக்கியுள்ளார். இதில் பலத்த காயம் அடைந்த முத்தம்மாள் தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இதுகுறித்த புகாரின் பேரில் தாளமுத்துநகர் காவல் நிலைய போலீசார் வழக்குப்பதிவு செய்து நட்டாரை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## அஜித்குமார் வழக்கில் அதிர்ச்சி திருப்பம்: பொய் புகார் கொடுத்தாரா நிகிதா..?

சிவகங்கை,ஆக.11

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் அருகே உள்ள மடப்புரம் காளி கோவில் காவலாளி அஜித்குமாரை, நிகிதா என்பவர் தனது நகை திருடப்பட்டதாக அளித்த புகாரில் அழைத்து சென்ற தனிப்படை போலீசார், விசாரணை என்ற பெயரில் சித்திரவதை செய்ததில், அவர் உயிரிழந்தார். இந்த சம்பவம் தமிழ்நாடு முழுவதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இந்த கொலை சம்பவத்தில் ஈடுபட்ட தனிப்படை காவலர்கள் 5 பேரும் கைது செய்யப்பட்டனர். அதேபோல் அஜித்குமார் குடும்பத்தினரிடம் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் மன்னிப்பு கேட்டதோடு, உரிய நீதி கிடைக்க வேண்டும் என்பதற்காக சிபிஐ விசாரணைக்கு மாற்றி உத்தரவிட்டார்.



விசாரணை அறிக்கையை சிபிஐ அதிகாரிகள் வரும் 20 ஆம் தேதிக்குள் தாக்கல் செய்ய மதுரை ஐகோர்ட்டு உத்தரவிட்டுள்ளது. சிபிஐ தரப்பில் விசாரணை அதிகாரியாக டெல்லியைச் சேர்ந்த மோகித் குமார் நியமிக்கப்பட்டுள்ளார். இந்த சம்பவத்தை கொலை வழக்காகப் பதிவு செய்து, சிபிஐ சிறப்பு குற்றப்பிரிவு டிஎஸ்பி மோகித்குமார் தலைமையிலான அதிகாரிகள் விசாரித்து வருகின்றனர். கடந்த 14ம் தேதி விசாரணைதுவங்கியநிலையில், தனிப்படை காவலர்களிடம் சிபிஐ அதிகாரிகள் விசாரணை நடத்தினர். தனிப்படை காவலர்களிடம் விசாரணை முடிந்த நிலையில் நீதிமன்றத்தில் அவர்கள் ஐந்து பேரையும் சிபிஐ அதிகாரிகள் ஆஜர்படுத்தினர். இதையடுத்து, 5 பேரையும் 13ம் தேதி வரை மதுரை மத்திய சிறையில் அடைக்க மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இதனிடையே காவலாளி அஜித்குமார் நகை திருடிய குற்றத்தை ஒப்புக்கொள்ள மறுத்ததால் தனிப்படை காவலர்கள் 5 பேர் உயிர் போகும் என தெரிந்தே அடித்ததாக எப்.ஐ.ஆரில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டதாக தகவல் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் திருப்புவனம் அஜித்குமார் வழக்கில் அதிர்ச்சி திருப்பம் ஏற்பட்டுள்ளது. இதன்படி கோவில் பார்க்கிங்கை விட்டு நிகிதா கார் வெளியே செல்லவே இல்லை என்று சிபிஐ விசாரணையில் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. கோவிலில் இருந்து கார் எங்குமே செல்லாத நிலையில், அஜித்குமார் மீது நிகிதா அளித்தது பொய் புகாராக இருக்கலாம் என சிபிஐ சந்தேகம் எழுப்பி உள்ளது. இதன்மூலம் சிபிஐ விசாரணையில், நிகிதா முன்னுக்குப் பின் முரணான தகவல்களை அளித்தது தெரிய வந்துள்ளது

## புத்தேரி நான்கு வழி சாலைப் பணிகள்: கன்னியாகுமரி கலெக்டர் நேரில் ஆய்வு

கன்னியாகுமரி ஆக. 11

கன்னியாகுமரி மாவட்டம், தேசிய நெடுஞ்சாலைத்துறையின் சார்பில் புத்தேரி பகுதியில் நடைபெற்று வரும் வளர்ச்சி திட்டப்பணிகளை மாவட்ட கலெக்டர் அழகுமீனா நேற்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். பின்னர்அவர்கூறியதாவது:

பொதுமக்கள் வெளி மாநிலங்கள் மற்றும் வெளி மாவட்டங்களிலிருந்து நாகர்கோவிலுக்கு வரும் போது, நாளுக்குநாள் வாகன நெரிசல் ஏற்படுவதாலும், தொலை தூரங்களுக்கு செல்ல சுற்றுப்பாதையினை பயன்படுத்துவதாலும், பயணத்தின் நேரம் அதிகமாகிறது.

இதனால் நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வாகன நெரிசல்களை குறைத்திடும் வகையில் நான்கு வழிச் சாலை பாதைகள் அமைக்கப்பட்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக புத்தேரி வழித்தடத்தில் 4 வழிப்பாதையின் ஒரு பகுதியாக புத்தேரி குளத்தின் குறுக்கே ஒரு பெரிய பாலம் (வில் நாண் வகை)



முன்மொழியப்பட்டுள்ளதோடு, 500 மீட்டர் (0.5 கிமீ) நீளம் கொண்ட பாலம் கட்டப்பட்டு வருகிறது. இக்கட்டுமானப் பணிகள் தற்போது முழு வேகத்தில் நடைபெற்று வருகிறது.

இந்த திட்ட செயல்பாட்டை பாதிக்கும் சிக்கல்கள் மற்றும் தடைகள் உள்ளனவா என துறை சார்ந்த அலுவலர்களிடம் கேட்டறியப்பட்டதோடு, அவற்றினை நிவர்த்தி செய்து கட்டுமான பணிகளை தொடர உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது தேசிய நெடுஞ்சாலைத் துறை திட்ட அலுவலர் வேல்ராஜ், உதவி திட்ட அலுவலர் சுப்பிரமணியசிவா மற்றும் துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## தூத்துக்குடியில் தேர்தல் ஆணையம், மத்திய அரசை கண்டித்து ஆர்ப்பாட்டம்

தூத்துக்குடி ஆக. 11

பீகார் மாநிலத்தில் சட்டமன்றத் தேர்தல் விரைவில் நடைபெற உள்ள நிலையில் வாக்காளர் பட்டியலில் சுருக்க முறை திருத்தம் என்ற பெயரில் சுமார் 65 லட்சம் வாக்காளர்கள் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர். இதற்கு எதிர்க்கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்து வருகின்றன.

இந்திய தேர்தல் ஆணையம் பீகார் மாநிலத்தில் வாக்காளர் பட்டியலில் சுருக்க முறை திருத்தம் என்பதை கைவிட வேண்டும். வாக்காளர் பட்டியலில் திருத்தம் என்ற பெயரில் குடிமக்களின் வாக்குரிமையை பறிப்பதை கைவிட வேண்டும் என்றும், வாக்காளர் பட்டியலில் முறைகேட்டில் ஈடுபடும் தேர்தல் ஆணையம் மற்றும் மத்திய பாரதிய ஜனதா அரசைக் கண்டித்தும் தூத்துக்குடி, சிதம்பரம்நகர் பஜார் பகுதியில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.



இந்த ஆர்ப்பாட்டத்துக்கு தூத்துக்குடி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாநகர செயலாளர் முத்து தலைமை வகித்தார். மத்திய குழு உறுப்பினர் சம்பத், மாவட்ட செயலாளர் ஆறுமுகம், ஒன்றிய செயலாளர் சங்கரன் ஆகியோர் கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினர். மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் ரவீந்திரன், ராஜா, புவிராஜ், மாவட்டக்குழு உறுப்பினர்கள் ராகவன், சுரேஷ், ரவிசந்திரன், நம்பி, ரவிதாகூர், ஶ்ரீநாத், இனிதா, மாநகர குழு உறுப்பினர்கள் ஆறுமுகம், ஆனந்த உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## காதலிக்குமாறு பிளஸ்2 மாணவியை கட்டாயப்படுத்திய வாலிபர்: உதவிய நண்பர்கள் பாய்ந்தது போக்சோ சட்டம்



திருப்பத்தூர், ஆக. 11

திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டை அருகே உள்ள ஒரு கிராமத்தைச் சேர்ந்தகூலித்தொழிலாளியின் 17 வயது மகள் அதே பகுதியில் உள்ள அரசு பள்ளியில் பிளஸ்2 படித்து வருகிறார். 2 ஆண்டுகளுக்கு முன்பு 10ம் வகுப்பு படிக்கும்போதே அதேபகுதியை சேர்ந்த பிரசாந்த் என்பவர் மாணவியை காதலிப்பதாக கூறி தொல்லை கொடுத்து வந்தார்.

இதனால், மாணவியின் பெற்றோர் ஜோலார்பேட்டை அருகே உள்ள ஒரு கிராமத்தில் வசித்து வரும் உறவினர் வீட்டுக்கு அவரை அனுப்பி வைத்து, அங்கிருந்து பள்ளிக்கு சென்று வருமாறு ஏற்பாடு செய்தனர். மாலை வகுப்பு முடிந்ததும் மாணவி சக்கரகுப்பம் வழியாக தனது பாட்டி வீட்டுக்கு சென்று வருவது வழக்கம்.

அதேபோல், கடந்த சில நாட்களுக்கு முன்பு மாணவி தனது பாட்டி வீட்டுக்கு மாலை நேரத்தில் சென்று கொண்டிருந்தார். இதையறிந்த பிரசாந்த் மீண்டும் மாணவியிடம் வந்து தன்னை காதலிக்குமாறு கூறி கட்டாயப்படுத்தி தொல்லை கொடுத்ததாக கூறப்படுகிறது. பிரசாந்த் தனக்கு உதவியாக 3 நண்பர்களை உடன் அழைத்துச் சென்றிருந்தார்.

நண்பர்களும், பிரசாந்துக்காக மாணவியிடம் பேசி அவரை காதலிக்குமாறு கேட்டுள்ளனர். ஆனால், மாணவி பிரசாந்த்தை காதலிக்க மறுத்து விட்டார். உடனே மாணவி அச்சத்தில் கூச்சல் போடவே அங்கிருந்த பொதுமக்கள் ஓடி வந்து 4 பேரையும் பிடித்து தாக்கினர். பொதுமக்கள் பிடியில் இருந்து 4 பேரும் விடுபட்டு மோட்டார்சைக்கிளில் தப்பி சென்றனர்.

இதுகுறித்து மாணவி தனது பெற்றோரிடம் தெரிவித்தார். இதையடுத்து பெற்றோர் ஜோலார்பேட்டை போலீசில் புகார் செய்தனர். போலீசார் சம்பவ இடத்துக்கு சென்று 4 பேரையும் பிடித்து விசாரித்தனர். அவர்கள் ஜோலார்பேட்டையை அடுத்த கோனேரிகுப்பத்தைச் சேர்ந்த முரளியின் மகன் பிரசாந்த் (வயது 26) மற்றும் அவரின் 3 நண்பர்கள் எனக் கூறினர். அதில் பிரசாந்த் என்பவர்தான் மாணவிக்கு காதல் தொல்லை கொடுத்தது தெரிய வந்தது.

இதையடுத்து போலீசார் பிரசாந்த் உள்பட 4 பேர் மீதும் போக்சோ சட்டத்தின்கீழ் 4 பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்து திருப்பத்தூர் கோர்ட்டில் ஆஜர்படுத்தி திருப்பத்தூர் சிறையில் அடைத்தனர்.

## நீர்நிலைகளில் களிமண்ணால் செய்த விநாயகர் சிலைகளை மட்டுமே கரைக்க வேண்டும்: தூத்துக்குடி கலெக்டர் அறிவுறுத்தல்





தூத்துக்குடி ஆக. 11

தூத்துக்குடி மாவட்ட கலெக்டர் இளம்பகவத் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

தமிழகம் சுற்றுச் சூழலை பாதுகாப்பதில் சிறந்த மாநிலமாக விளங்கி வருகிறது. நீர் நிலைகள் (கடல், ஆறு மற்றும் குளம்) நமக்கு குடிநீர் ஆதாரத்தை தருகிறது. நீர் நிலைகளை பாதுகாக்கும் வகையில் விநாயகர் சதுர்த்தி விழாவை கொண்டாடும் போது, விநாயகர் சிலைகளை நீர்நிலைகளில் கரைப்பதற்க மத்திய, மாசு கட்டுப்பாட்டு வாரிய வழிகாட்டுதலின்படி மாவட்ட நிர்வாகத்தால் குறிப்பிடப்பட்டு உள்ள இடங்களில் மட்டும் கரைத்து சுற்றுச்சூழலை பாதுகாக்க ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

அதன்படி நீர்நிலைகளில் களிமண்ணால் செய்யப்பட்ட விநாயகர் சிலைகளை மட்டுமே கரைக்க வேண்டும். பிளாஸ்டர் ஆப் பாரிஸ், தெர்மோகூல் பயன்படுத்தக்கூடாது. சிலைகளின் ஆபரணங்கள் தயாரிப்பதற்கு உலர்ந்த மலர்கூறுகள், வைக்கோல் போன்றவை பயன்படுத்தப்படலாம். மேலும், சிலைகளை பளபளப்பாக மாற்றுவதற்கு மரங்களின் இயற்கை பிசின்கள் பயன்படுத்தப்படலாம்.

சிலைகளுக்கு வர்ணம் பூசுவதற்கு நச்சு மற்றும் மக்காத ரசாயன சாயம், எண்ணெய்வண்ணப்பூச்சுகளை கண்டிப்பாக பயன்படுத்தக்கூடாது. சிலைகளின் மீது எனாமல்மற்றும்செயற்கை சாயத்தை அடிப்படையாக கொண்ட வண்ணப்பூச்சுகளை பயன்படுத்தக்கூடாது, இயற்கை பொருட்கள் மற்றும் இயற்கை சாயங்களால் செய்யப்பட்ட அலங்கார ஆடைகள் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்.

விநாயகர் சிலைகளை மாவட்ட நிர்வாகத்தால் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களான முத்தையாபுரம், திரேஸ்புரம், திருச்செந்தூர் மற்றும்குலசேகரபட்டினம் ஆகிய இடங்களில் மட்டும் மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் விதிமுறைகளின்படி கரைக்க வேண்டும். விநாயகர் சதுர்த்தி விழாவை சுற்றுச்சூழலை பாதிக்காதவாறு மக்கள் கொண்டாடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும் விவரங்களுக்கு மாவட்ட கலெக்டர், எஸ்.பி., மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் ஆகியோரை அணுகலாம். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## மயங்கி விழுந்து உயிரிழந்த கல்லூரி மாணவி.. சாப்பிட்ட சிக்கன் ரைஸ் காரணமா..?

மதுரை ஆக. 11

மதுரை திருமங்கலம் அருகே உள்ள பொன்னமங்கலம் கிராமத்தை சேர்ந்தவர் கருப்பையா. கூலித் தொழிலாளி. இவருடைய மகள் பாண்டிச் செல்வி (வயது 24). பட்டதாரி. தற்போது திருமங்கலம் அண்ணா நகர் பகுதியில் கருப்பையா குடும்பத்துடன் வசித்து வருகின்றார்.

பாண்டிச்செல்வி நேற்று மதியம் விருதுநகர் ரோட்டில் உள்ள ஒரு உணவகத்தில் சிக்கன் ரைஸ் வாங்கிக்கொண்டு வீட்டிற்கு வந்தார். பின்னர் அவர் சிக்கன்ரைஸ் சாப்பிட்டுள்ளார்.





சாப்பிட்ட சிறிது நேரத்தில் வாந்தி எடுத்து மயங்கியுள்ளார். இதனை பார்த்து அதிர்ச்சிஅடைந்த பெற்றோர் மற்றும் உறவினர்கள் உடனடியாகஅவரைமீட்டு திருமங்கலம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தனர். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது.

ஆனாலும்அவர்சிகிச்சை பலனின்றி நேற்று இரவு அவர் உயிரிழந்தார். அவரது உடலை பார்த்து பெற்றோர், உறவினர்கள் கதறி அழுதனர். இது குறித்து திருமங்கலம் டவுன் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த சம்பவம் திருமங்கலம் பகுதியில் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

## கன்னியாகுமரி: அரசு பொறியியல் கல்லூரியில் போலி நியமன ஆணை வழங்கிய 3 பேர் கைது



கன்னியாகுமரி ஆக. 11

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில், கோணம் அரசு பொறியியல் கல்லூரியில் போலி நியமன ஆணை வழங்கிய விவகாரத்தில் தொடர்புடையவர்களை கைது செய்யுமாறு மாவட்ட எஸ்.பி. ஸ்டாலின் உத்தரவிட்டார்.

அதன் பேரில் தனிப்படை போலீசார் மேற்கொண்ட விசாரணையில் விழுப்புரம் மாவட்டத்தில் பதுங்கி இருந்த விழுப்புரம் மாவட்டம்,

திண்டிவனம் 5வது குருக்குவீதி பகுதியை சேர்ந்த சீனிவாசன் மகன் செல்வகுமார் (வயது 50), திண்டிவனம், சஞ்சிவிராயன்பேட்டை பகுதியை சேர்ந்த மக்தூம்இப்ராகிம் மகன் முகமது இஸ்மாயில்(51) மற்றும் திண்டிவனம், ஆசிரியர்நகர் பகுதியை சேர்ந்த ராஜேந்திரன்மகன்பாபு(42) ஆகியோர் பணி ஆணை மோசடியில் ஈடுபட்டது தெரியவந்தது.

இதனையடுத்து அவர்கள் 3 பேரையும் தனிப்படை போலீசார் திண்டிவனம் சென்று கைது செய்தனர். மேலும் அவர்களிடம் இருந்து போலி அரசு பணி ஆணைகள் மற்றும் அதற்கு பயன்படுத்திய போலி அரசு முத்திரைகள், கம்ப்யூட்டர்களை பறிமுதல் செய்து, மூன்று பேரையும் சிறையில் அடைத்தனர்.

## "அது மட்டும் போதும்" விஜயகாந்தின் மகன் கண்ணீர் மல்க பேச்சு

சென்னை, ஆக. 11

பட விழாவில் நடிகர் விஜயகாந்தின் மகன் விஜய பிரபாகரன் கண்ணீர் மல்க பேசிய வீடியோ இணையத்தில் வைரலாகி வருகிறது. ''கேப்டன் பிரபாகரன்'' படம் வரும் 22ல் ரீரிலீஸ் செய்யப்படுகிறது. இந்நிலையில் படத்தின் இசை, டிரெய்லர் மறு வெளியீட்டு விழாவில், நடிகர் விஜயகாந்தின் மகன் விஜய பிரபாகரன் கண்ணீர் மல்க பேசினார். அவர் கூறுகையில், "எம்.பி பதவி எல்லாம் எனக்கு முக்கியம் இல்லை. கேப்டன் மகன் விஜய பிரபாகரன், எனக்கு வேற பெருமை ஏதும் வேண்டாம், கடைசி வரைவிஜயகாந்த் மகன் என்கிற பெருமை மட்டும் போதும்" என்றார். ஆர். கே. செல்வமணி இயக்கத்தில் விஜயகாந்த் நடிப்பில் கடந்த 1991ம் ஆண்டு வெளியான படம் 'கேப்டன் பிரபாகரன்'. இது விஜயகாந்தின் 100வது படமாகும். இப்படத்தின் மூலம் விஜய்காந்திற்கு 'கேப்டன்' என்ற அடைமொழி கிடைத்தது. இந்த படத்தில் சரத்குமார், மன்சூர் அலி கான், ரூபினி, லிவிங்ஸ்டன், ரம்யா கிருஷ்ணன் ஆகியோர் நடித்தனர். இந்தப்படம் மூலம் தங்களது திரையுலக பயணத்தில் திருப்புமுனை பெற்றவர்கள் பலர். இளையராஜாவின் இசையில் இந்த படத்தில் இடம்பெற்ற பாசமுள்ள பாண்டியரே என்கிற பாடலும்

ஆட்டமாதேரோட்டமாஎன்கிறபாடலும்இன்றைக்கும் ஒவ்வொரு ஊரிலும் திருவிழாக்களிலும் விசேஷ வீடுகளிலும் தவறாமல் இடம் பிடிக்கும் கொண்டாட்ட பாடல்களாக அமைந்து விட்டன.

## மின் நுகர்வோருக்கு பெயர் மாற்ற உத்தரவு: திருநெல்வேலி மேற்பார்வை பொறியாளர் வழங்கினார்

திருநெல்வேலி ஆக. 11

திருநெல்வேலி மின் பகிர்மான வட்டத்திற்கு உட்பட்ட திருநெல்வேலி நகர்ப்புற கோட்டத்தில் திருநெல்வேலி மாநகராட்சி வார்டு எண் 10 மற்றும் 11 பகுதிகளை சார்ந்த பொதுமக்களுக்காக அனைத்து துறைகளின் சார்பில் உங்களுடன் ஸ்டாலின் முகாம் வடக்கு புறவழிச்சாலையில் உள்ள தனியார் மண்டபத்தில் நேற்று காலை முதல் நடைபெற்றது. உங்களுடன் ஸ்டாலின் முகாமில் எரிசக்தி துறை சார்பில் அமைக்கப்பட்டுள்ள முகாமை திருநெல்வேலி மின் பகிர்மான வட்ட மேற்பார்வை பொறியாளர் அகிலாண்டேஸ்வரி ஆய்வு மேற்கொண்டார். அப்போது மின் நுகர்வோர் அளித்த பெயர் மாற்ற விண்ணப்பத்தை ஆய்வு செய்து வாரிய விதிமுறைகளுக்கு உட்பட்டு ஆவணங்கள் சமர்பிக்கப்பட்டதால் உடனடியாக பெயர் மாற்றம் செய்யப்பட்ட உத்தரவினை பயனாளிக்கு வழங்கினார். இந்த நிகழ்ச்சியின்போது மக்கள் தொடர்பு அலுவலர் உதவி செயற்பொறியாளர் சங்கர், பாளையங்கோட்டை உபகோட்டம் உதவி செயற்பொறியாளர் ஜெயசீலன், வண்ணாரப்பேட்டை உதவி மின் பொறியாளர் முருகன், சமாதானபுரம் உதவி மின் பொறியாளர் ஜெய்சிங் தர்மராஜ், திருநெல்வேலி சந்திப்பு உதவி மின் பொறியாளர் உமாமகேஸ்வரி மற்றும் அலுவலர்கள் பணியாளர்கள் உடன் இருந்தனர். கடந்த 15.7.2025. முதல் நேற்று முன்தினம் 7.8.2025 வரை திருநெல்வேலி மின் பகிர்மான வட்டத்திற்கு திருநெல்வேலி மற்றும் தென்காசி மாவட்டத்திற்க்கு உட்பட்ட பகுதிகளில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் முகாமில் எரிசக்தி துறை சார்பில் பொதுமக்களிடம் இருந்து இதுவரை 675 மனுக்கள் பெறப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தின கனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

11.8.2025

# திருமாவளவனால் தி.மு.கவிடம் பொது தொகுதியை கேட்க முடியுமா? சீமான் கேள்வி



மதுரை, ஆக. 11

மதுரை விமான நிலையத்தில் நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர்சீமான் செய்தியாளர்களுக்குப் பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது: தமிழ்நாட்டில் தமிழர்களால் வாக்கு செலுத்தி தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு உள்ளது. இதில் எங்கிருந்து திராவிட மாடல் ஆட்சி வருகிறது. தமிழர் அறம் சார்ந்த ஆட்சி என திமுகவால் சொல்ல முடியவில்லை.

திராவிடம் என்பது தமிழ்ச்சொல் அல்ல. அது சமஸ்கிருதத்திலிருந்து வந்தது.

பிராமண எதிர்ப்பை காட்டி திராவிட இருப்பை காட்டியவர்கள் திமுக. இதே வீரமணி, சமூக நீதி காத்த வீராங்கனை என்று சொல்லி ஜெயலலிதாவுக்கு செங்கோல் கொடுத்தாரே! பெரியார், அண்ணா வழியில் வந்ததாக சொல்லிக் கொள்ளும் நீங்கள் செய்யாததை ஜெயலலிதா செய்தார். திமுகவில் ஆ.ராசா வெற்றி பெற்ற பெரம்பலூர் தொகுதி பொதுத்தொகுதியானபோது அங்கு ஆ. ராசாவை நிறுத்தாமல் நீலகிரி தனித்தொகுதியில் போட்டியிடுமாறு கருணாநிதி செய்தார். ஆனால் ஜெயலலிதா, திருச்சி பொதுத்தொகுதியில் தலித் எழில்மலையை நிறுத்தி வெற்றி பெறச் செய்தார்.

தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த தனபாலை சபாநாயகராக்கினார், உணவுத்துறை அமைச்சராக்கினார். இதுதானே மாறுதல். இதைக்கூட திமுக செய்யவில்லை. திமுகவிடமிருந்து ஒரு பொதுத்தொகுதியை கேட்டுப்பெற திருமாவளவன் என்ன பாடுபடுகிறார். பொதுக்குளத்தில் நீங்கள் எல்லாம் குளிக்கக்கூடாது என்பதுபோல் பொதுத்தொகுதிக்கு நீங்கள் எல்லாம் ஆசைப்படக்கூடாது என்று திமுக சொன்னது பதிவாகியுள்ளது. " இவ்வாறு அவர் கூறினார்.

# நலம் காக்கும் ஸ்டாலின் திட்ட முகாம் மூலம் 48,418 பேர் பயன் அமைச்சர் மா.சுப்பிரமணியன்

சென்னை, ஆக. 11

செங்கல்பட்டு மாவட்டம் கிளாம்பாக்கம் அரசு ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளியில் நடைபெற்ற 'நலம் காக்கும் ஸ்டாலின்' திட்ட முகாமை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று ஆய்வு செய்தார். பின்னர், அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

" முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் கடந்த 2ந்தேதி நலம் காக்கும் ஸ்டாலின் திட்டத்தை தொடங்கி வைத்தார். ஒரே நாளில் தமிழ்நாடு முழுவதும் 38 இடங்களில் முகாம் நடத்தப்பட்டது. இதைத் தொடர்ந்து, இன்று (அதாவது நேற்று) சென்னை, ஊட்டி தவிர்த்து 36 இடங்களில் முகாம் நடத்தப்பட்டது. ஒவ்வொருவருக்கும் முழு உடல் பரிசோதனை செய்யப்படுகிறது. 6 மாதத்திற்குள் தமிழ்நாடு முழுவதும் 1,256 இடங்களில் நடத்தப்படும்.

கடந்த வாரம் நடந்த முகாமில் 44 ஆயிரத்து 418 பேர் மருத்துவ பயன் பெற்றிருந்தார்கள். இந்த வாரம் நடந்த 36 முகாம்களில் 48 ஆயிரத்து 418 பேர் பயன் பெற்றுள்ளனர். இந்த முகாம் மிகப்பெரிய அளவில் வெற்றி பெற்றிருக்கிறது.

ஒவ்வொரு முகாமிலும் ஆயிரக்கணக்கானோர் முழு உடல் பரிசோதனை செய்துகொள்ளும் போது அவர்களுக்கான மருத்துவ சேவைகள் உடனடியாக வழங்கப்பட்டு மருத்துவ அறிக்கை கோப்புகள் வழங்கப்படுகிறது. அவர்களுக்கு எதிர்காலத்தில் ஏற்படும் நோய் பாதிப்புகளுக்கு இந்த மருத்துவ அறிக்கை பயன்பெறும்.

இதேபோல, ரூ.110 கோடி மதிப்பில் செங்கல்பட்டு மாவட்ட அரசு தலைமை ஆஸ்பத்திரி கட்டிடம் மற்றும் ரூ.5 கோடி மதிப்பீட்டில் மருத்துவ உபகரணங்கள் என மொத்தம் ரூ.115 கோடி மதிப்பீட்டில் மாவட்ட தலைமை ஆஸ்பத்திரியை முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் பயன்பாட்டுக்கு கொண்டுவந்துள்ளார். பல்லாவரம் வட்டார அரசு ஆஸ்பத்திரியில் ரூ.7.75 கோடி மதிப்பீட்டில் பல் ஆஸ்பத்திரி திறக்கப்பட்டுள்ளது. 3 இடங்களில் துணை சுகாதார நிலையங்களும் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அரசு ஆஸ்பத்திரிகளில் டாக்டர்கள் பற்றாக்குறை என்பது கிடையாது. டாக்டர்கள், நர்சுகள் பற்றாக்குறை என்பது தொடர்ச்சியாக கூறப்படுகிற பொய்யான குற்றச்சாட்டு. வேண்டுமென்றே சிலர் இந்த பொய்யான குற்றச்சாட்டை பரப்பி வருகிறார்கள்."

இவ்வாறு அவர் கூறினார்.

# ஓமலூர் அருகே பறிமுதல் செய்யப்பட்ட 6,839 மதுபாட்டில்கள் அழிப்பு



ஓமலூர், ஆக. 11

ஓமலூரில் உள்ள இரும்பாலை மதுவிலக்குபிரிவு, சூரமங்கலம் மற்றும் மேட்டூரில் உள்ள மதுவிலக்கு பிரிவு போலீசார் தொடர்ந்து மதுவிலக்கு வேட்டையில் ஈடுபட்டு வருகின்றனர். இந்தநிலையில் மதுவிற்பனையை தடுத்து பல்வேறு இடங்களில் மதுபாட்டில்கள் கடத்தல் வழக்கில் பறிமுதல் செய்யப்பட்ட மதுபாட்டில்கள் ஓமலூர் மதுவிலக்கு போலீஸ் நிலையம், சூரமங்கலம் மதுவிலக்கு போலீஸ் நிலையத்தில் வைக்கப்பட்டு இருந்தன.

அந்த வகையில், கடந்த 2 ஆண்டுகளாக பறிமுதல் செய்து வைக்கப்பட்டு இருந்த சுமார் 6 ஆயிரத்து 839 மதுபாட்டில்களை உடனடியாக கொட்டி அழிப்பதற்கு நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதனைத்தொடர்ந்து மதுவிலக்கு போலீஸ் துணை சூப்பிரண்டு மகாவிஷ்ணு, டாஸ்மாக் மேலாளர் பன்னீர் செல்வம் மற்றும் அதிகாரிகள் முன்னிலையில் ஓமலூர் அருகே வேலகவுண்டனூர் பகுதியில் உள்ள ஏரியில் 6,839 மதுபாட்டில்களை தரையில் கொட்டினர். பின்னர் பொக்லைன் எந்திரம் மூலம் அதன் மீது ஏற்றி உடைத்து அழித்தனர்.

அப்போது மதுபாட்டில்கள் வெடித்து சிதறி அந்த இடமே மது ஆறாக ஓடியது. தொடர்ந்து அழிக்கப்பட்ட மதுபாட்டில்களின் கண்ணாடிகள் அருகே பள்ளம் தோண்டி புதைக்கப்பட்டது.

# உசிலம்பட்டி அருகே திடீரென தீப்பற்றி எரிந்த கார் மதுரையில் பரபரப்பு

உசிலம்பட்டி, ஆக. 11

மதுரை மாவட்டம் உசிலம்பட்டி அருகே பொட்டுலுப்பட்டியை சேர்ந்தவர் காசிப்பாண்டி. இவர் தனது காரில் பள்ளி மாணவமாணவிகளை அழைத்து செல்வது வழக்கம். அதன்படி நேற்று பள்ளி முடிந்ததும் கட்டக்கருப்பன்பட்டியில் மாணவர்களை இறக்கி விட்டார். பின்னர் 6 மாணவமாணவிகளுடன் பொட்டுலுப்பட்டிக்கு காரில் திரும்பி கொண்டிருந்தார்.

அப்போது போலிபட்டி அருகில் மதுரைபோடி ரெயில்வே பாலத்தின் அடியில் வந்த காரில் திடீரென கரும்புகை வந்தது. உடனே அவர் காரை நிறுத்தினார். காரில் இருந்த மாணவமாணவிகளும், டிரைவரும் இறங்கி வெளியே ஓடினார்கள். அப்போது கண் இமைக்கும் நேரத்திலேயே கார் பற்றி எரிந்தது. தீ பிளம்பாக காட்சியளித்தது.

இது குறித்து தகவலறிந்து உசிலம்பட்டி தீயணைப்புத் துறை நிலைய அலுவலர் ஜீவா தலைமையிலான வீரர்கள் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்தனர். அவர்கள் போராடி தீயை கட்டுப்படுத்தினர். அதற்குள் கார் முழுவதும் எரிந்து எலும்பு கூடாக மாறியது, இந்த விபத்து குறித்து உசிலம்பட்டி தாலுகா காவல் நிலைய போலீசார் தொடர் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# இன்றைய ராசி பலன்கள் (11.8.2025)

மேஷம்: திடீர் பயணம் அமையும். வேலைப்பளு குறையும். எதிர்பார்த்த விஷயம் நிறைவேறும்.

ரிஷபம்: குடும்பச் சுமைகள் குறையும். உடல் ஆரோக்கியம் மேம்படும். புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.

மிதுனம்: ெருங்கியவர்களிடமிருந்து உதவி கிடைக்கும். பணவரவு உயரும். மன நிறைவு அமையும்.

கடகம்: பழைய பாக்கிகள் வசூலாகும். உறவினர் சந்திப்பு மகிழ்ச்சி தரும். வியாபாரத்தில் லாபம் உண்டு.

சிம்மம்: போட்டிகளில் வெற்றி. புது தொடர்புகள் கிடைக்கும். பயணத்தால் நன்மை.

கன்னி: நிலம், வீடு தொடர்பான பேச்சுவார்த்தையில் நல்ல முடிவு. வருமானம் அதிகரிக்கும்.

துலாம்: மனதில் இருந்த குழப்பங்கள் நீங்கும். பணியில் மேம்பாடு. குடும்பத்தில் மகிழ்ச்சி..

விருச்சிகம்: புது திட்டங்கள் வெற்றி பெறும். வேலை தொடர்பான பயணம் உண்டு. உடல் நலம் பாதுகாப்பாக இருக்கும்.

தனுசு: நெருங்கியவர்களின் ஆதரவு கிடைக்கும். கல்வியில் சிறந்த முன்னேற்றம். செலவு கட்டுப்பாட்டில் இருக்கும்.

மகரம்: புது முயற்சிகள் லாபம் தரும். சிந்தனையில் தெளிவு. வெளிநாட்டு தொடர்பு நல்ல பலன் தரும்.

கும்பம்: நண்பர்கள் மூலம் நன்மை. குடும்பத்தில் ஒற்றுமை. ஆரோக்கியம் சீராக இருக்கும்.

மீனம்: மனதில் மகிழ்ச்சி. வருமானம் உயரும். விரும்பிய காரியம் நிறைவேறும்.

# சென்ட்ரல் அரக்கோணம் வழித்தடத்தில் மின்சார ரெயில் சேவையில் மாற்றம் தெற்கு ரெயில்வே தகவல்

சென்னை, ஆக. 11

தெற்கு ரெயில்வே வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: "சென்னை சென்ட்ரல் அரக்கோணம் வழித்தடத்தில், கடம்பத்தூர், திருவளங்காடு ரெயில் நிலையத்தில் பராமரிப்பு பணிகள் நடைபெற உள்ளது. எ னவே, நாளை(10.08.2025) காலை 7.30 மணி வரை மின்சார ரெயில் சேவையில் மாற்றம் செய்யப்படுகிறது. அதன்படி, சென்னை சென்ட்ரலில் இருந்து காலை 5 மணிக்கு திருவள்ளூர் செல்லும் ரெயில், சென்ட்ரலில் இருந்து காலை 5.30 மணிக்கு அரக்கோணம் செல்லும் ரெயில், திருவள்ளூரில் இருந்து காலை 5.55 மணிக்கு சென்ட்ரல் வரும் மின்சார ரெயில் ஆகியவை ரத்து செய்யப்படுகிறது.

எக்ஸ்பிரஸ் ரெயில் வழித்தடத்தில் இயக்கப்பட இருப்பதால் ஆவடியில் இருந்து காலை 6.20 மணிக்கு அரக்கோணம் செல்லும் ரெயில், சென்ட்ரலில் இருந்து காலை 6 மணிக்கு திருத்தணி புறப்படும் ரெயில், சென்னை கடற்கரையில் இருந்து 5.40 மணிக்கு திருவள்ளூர் செல்லும் ரெயில், சென்டிரலில் இருந்து 6.30 மணிக்கு அரக்கோணம் செல்லும் மின்சார ரெயில்கள் பட்டாபிராம், நெமிலிச்சேரி, வேப்பம்பட்டு, செவ்வாப்பேட்டை ஆகிய நிலையங்களில் நிற்காது.

மேலும், கடம்பத்தூரில் இருந்து காலை 6.15 மணிக்கு சென்டிரல் செல்லும் மின்சார ரெயில், திருத்தணியில் இருந்து 5.30 மணிக்கு சென்டிரல் வரும் ரெயில், திருவள்ளூரில் இருந்து காலை 6.50 மற்றும் 7 மணிக்கு சென்டிரல் வரும் ரெயில், அரக்கோணத்தில் இருந்து 6.20, 6.40 மணிக்கு சென்டிரல் செல்லும் ரெயில், திருத்தணியில் இருந்து காலை 6.30, 7.10க்கு சென்டிரல் செல்லும் மின்சார ரெயில்கள் புட்லூர், நெமிலிச்சேரி, பட்டாபிராம் ஆகிய நிறுத்தங்களில் நிற்காது." இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. கடம்பத்தூர், திருவளங்காடு ரெயில் நிலையத்தில் பராமரிப்பு பணிகள் இன்று இரவு 9.30 மணிக்கு தொடங்கியது. இதனால், திருவள்ளூரில் இருந்து இரவு 9.55 மற்றும் 10.15 மணிக்கு புறப்பட வேண்டிய மின்சார ரெயில் ரத்து செய்யப்பட்டது. சென்ட்ரலில் இருந்து இன்று இரவு 9 மணிக்கு மேல் புறப்பட்டு திருவள்ளூர், அரக்கோணம் சென்ற 7 மின்சார ரெயில்கள் பட்டாபிராம், நெமிலிச்சேரி, வேப்பம்பட்டு, செவ்வாப்பேட்டை ஆகிய நிறுத்தங்களில் நிற்காமல் சென்றது. ரெயில் சேவை மாற்றம் குறித்து முன்கூட்டிய தெற்கு ரெயில்வே தகவல் தெரிவிக்காததால் பயணிகள் சிரமத்திற்கு ஆளானார்கள்.

# 4கே தரத்தில் வெளியானது கேப்டன் பிரபாகரன் டிரெய்லர்




தமிழ் திரையுலகில் முன்னணி நடிகராக வலம் வந்தவர் விஜயகாந்த். இவர் 1979ம் ஆண்டு வெளியான 'அகல் விளக்கு' திரைப்படத்தின் மூலம் நடிகராக தமிழ் சினிமாவில் அறிமுகமானார். அதன்பின்னர் அவர் நடித்த அனைத்து படங்களுமே வெற்றி படங்களாக அமைந்தன.

அந்த வகையில், விஜயகாந்த் நடிப்பில் கடந்த 1991ம் ஆண்டு வெளியான படம் 'கேப்டன் பிரபாகரன்'. இது விஜயகாந்தின் 100வது படமாகும். இப்படத்தின் மூலம் தான் விஜய்காந்திற்கு 'கேப்டன்' என்ற அடைமொழி கிடைத்தது. இந்த படத்தில் மன்சூர் அலி கான், ரூபினி, லிவிங்ஸ்டன், ரம்யா கிருஷ்ணன் ஆகியோர் நடித்துள்ளனர்.

இந்த நிலையில், கேப்டன் பிரபாகரன் படம் வெளியாகி 34 ஆண்டுகள் நிறைவடைவதையொட்டி வருகிற 22ந் தேதி ரீரிலீஸ் செய்யப்பட உள்ளது. அதாவது இப்படம் 4 கே தரத்தில் டிஜிட்டல் முறையில் வெளியாக உள்ளது. இந்த நிலையில், கேப்டன் பிரபாகரன் படத்தின் மேம்படுத்தப்பட்ட டிரெய்லர் வெளியிடப்பட்டுள்ளது.

# மகா அவதார் நரசிம்மா திரைப்படம்: உலகளவில் இத்தனை கோடி வசூலா?





கேஜிஎப், காந்தாரா உள்ளிட்ட படங்களை தயாரித்த கன்னடத்தில் மிகப்பெரிய தயாரிப்பு நிறுவனமான ஹொம்பாலே பிலிம்ஸ் குறைந்த செலவில் பிரமாண்ட படங்களை தயாரிப்பதில் தனித்துவம் பெற்றது. இந்தத் தயாரிப்பு நிறுவனம் தயாரித்துள்ள 'மகா அவதார் நரசிம்மா' படம் இரண்ய கசிபு என்ற அரக்கன், அவனது மகன் பிரகலாதன், விஷ்ணுவை மையமாக வைத்து புராண திரைப்படமாக உருவாகியிருக்கிறது.

இந்த அனிமேஷன் படத்தை அஸ்வின் குமார் இயக்கியுள்ளார். இந்த படத்திற்கு சாம் சி.எஸ் இசையமைத்துள்ளார். அனிமேஷனில் வரும் காட்சிகள் உலகத் தரத்தில் இருப்பதாக சினிமா ரசிகர்கள் சமூக வலைதளங்களில் கூறி வருகிறார்கள். மகாவிஷ்ணுவின் பத்து அவதாரங்களை விவரிக்கும் வகையில் அடுத்தடுத்த படங்கள் வெளியாக உள்ளன.

இந்நிலையில், இந்தப் படத்தின் வசூல் குறித்த விவரத்தை தயாரிப்பு நிறுவனமான ஹொம்பாலே பிலிம்ஸ் வெளியிட்டுள்ளது. அதன்படி, இப்படம் உலகளவில் இதுவரை ரூ.150 கோடிக்கும் அதிகமாக வசூல் செய்துள்ளதாக அறிவித்துள்ளது. படத்தின் வசூல் மேலும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# காந்தா படத்திலிருந்து பனி மலரே பாடல் வெளியீடு




மலையாள சினிமா முன்னணி நடிகர்களுள் ஒருவர் துல்கர் சல்மான். அவர் கடைசியாக லக்கி பாஸ்கர் என்ற படத்தில் நடித்திருந்தார். இப்படம் ரூ.100 கோடிக்கு மேல் வசூல் செய்து சாதனை படைத்தது.

அதனை தொடர்ந்து செல்வணி செல்வராஜ் இயக்கத்தில் துல்கர் சல்மான் "காந்தா" என்ற படத்தில் நடித்துள்ளார். இப்படத்தில் 'மிஸ்டர் பச்சன்' திரைப்பட புகழ் பாக்யஸ்ரீ , துல்கர் சல்மானுக்கு ஜோடியாக நடித்துள்ளார். வேபாரர் பிலிம்ஸ் மற்றும் ஸ்பிரிட் மீடியா நிறுவனம் இணைந்து தயாரித்துள்ள இப்படத்தில் ராணா டகுபதி முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். இப்படம் வருகிற செப்டம்பர் 12ந் தேதி திரையரங்குகளில் வெளியாக உள்ளது.

இந்த நிலையில், இப்படத்தின் பர்ஸ்ட் சிங்கிளான "பனி மலரே" என்ற லிரிக்கல் பாடல் வெளியாகி உள்ளது. இந்த பாடலை பிரதீப் குமார் மற்றும் பிரியங்கா என்பி இணைந்து பாடியுள்ளனர். பாடல் வரிகளை குட்டி ரேவதி எழுதியுள்ளார்.

# 20 மில்லியன் பார்வைகளை கடந்த பவர் ஹவுஸ் பாடல்





நடிகர் ரஜினிகாந்த் மற்றும் இயக்குநர் லோகேஷ் கனகராஜ் கூட்டணியில் உருவாகி இருக்கும் திரைப்படம் கூலி. இப்படத்திற்கு அனிருத் இசையமைத்துள்ளார். இந்தப்படத்தில் அமீர்கான், சத்யராஜ், நாகர்ஜுனா, சவுபின் ஷாஹிர், ஸ்ருதிஹாசன், பகத் பாசில், ரெபா மோனிகா ஜான் மற்றும் உபேந்திரா ஆகியோர் நடித்துள்ளனர்.

இப்படத்தின் மீது மிகப்பெரிய எதிர்பார்ப்பு ரசிகர்கள் மத்தியில் நிலவி வருகிறது. கூலி திரைப்படம் வரும் ஆகஸ்ட் 14ம் தேதி வெளியாகிறது. இப்படத்தில் இடம் பிடித்துள்ளசிக்கிடு, மோனிக்காபாடல்கள்வெளியானதை தொடர்ந்து, 'கூலி' படத்தின் 3வது பாடலான 'பவர்ஹவுஸ்' பாடல் கடந்த வாரம் வெளியானது. இந்த பாடல் ரசிகர்களிடம் மிகப்பெரிய வரவேற்பை பெற்றது.

இந்த லிரிக் வீடியோ பாடல் யூடியூபில் இதுவரை 20 மில்லியனுக்கும் அதிகமான பார்வைகளை பெற்றுள்ளதாக படக்குழு தயாரிப்பு நிறுவனமான சன் பிக்சர்ஸ் அறிவித்துள்ளது.

# சின்சினாட்டி ஓபன் டென்னிஸ்: ரைபகினா 3வது சுற்றுக்கு முன்னேற்றம்



சின்சினாட்டி ஓபன் சர்வதேச டென்னிஸ் போட்டி அமெரிக்காவின் சின்சினாட்டி நகரில் நடைபெற்று வருகிறது.. அமெரிக்க ஓபனுக்கு முன்னோட்டமாக கருதப்படும் நூற்றாண்டு கால பழமைவாய்ந்த இந்த போட்டியில் முன்னணி வீரர், வீராங்கனைகள் அனைவரும் பங்கேற்றுள்ளார்கள்.

இதில் இன்று நடந்த மகளிர் ஒற்றையர் பிரிவின் 2வது சுற்று ஆட்டம் ஒன்றில் முன்னணி வீராங்கனையான எலினா ரைபகினா (கஜகஸ்தான்), ரெனாட்டா ஜராசுவா (மெக்சிகோ) உடன் மோதினார்.

இந்த மோதலில் தொடக்கம் முதலே அபாரமாக செயல்பட்டு ஆதிக்கம் செலுத்திய ரைபகினா 46, 60, 75 என்ற செட் கணக்கில் ரெனாட்டா ஜராசுவாவை வீழ்த்தி 3வது சுற்றுக்கு முன்னேறினார்.

# ஐ.பி.எல். ஒன்றும் தமிழ்நாடு கிரிக்கெட் அல்ல: அஸ்வின் சிஎஸ்கே விவகாரத்தில் ஸ்ரீகாந்த் கருத்து



அண்மையில் முடிவடைந்த 18வது ஐ.பி.எல். தொடரில் பஞ்சாப் கிங்சை வீழ்த்தி ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணி கோப்பையை கைப்பற்றியது. இதில் 5 முறை சாம்பியனான சென்னை சூப்பர் கிங்ஸ் அணி மோசமான செயல்பாட்டை வெளிப்படுத்தி புள்ளி பட்டியலில் கடைசி இடத்தை பிடித்தது. ஐ.பி.எல். வரலாற்றில் சென்னை அணி புள்ளி பட்டியலில் கடைசி இடத்தை பிடிப்பது இதுவே முதல் முறையாகும்.

முன்னதாக இந்த சீசனில் சென்னை அணிக்காக ரூ.9.75 கோடிக்கு வாங்கப்பட்ட தமிழக வீரரான ரவிச்சந்திரன் அஸ்வின் எதிர்பார்ப்புக்கு நிகராக செயல்படவில்லை. 9 போட்டிகளில் விளையாடி வெறும் 7 விக்கெட்டுகள் மட்டுமே வீழ்த்தி அணிக்கு பின்னடைவை கொடுத்தார். இதனால் அவரை பலரும் விமர்சித்தனர். இந்நிலையில் ரவிச்சந்திரன் அஸ்வின், சென்னை சூப்பர் கிங்ஸ் அணியில் இருந்து விலக முடிவெடுத்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. அடுத்த ஐ.பி.எல். தொடருக்கு முன்பாக தன்னை விடுவிக்குமாறு அவர் சிஎஸ்கே நிர்வாகத்திடம் கோரிக்கை வைத்துள்ளதாக கூறப்படுகிறது. இது ரசிகர்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

இதனிடையே சென்னை சூப்பர் கிங்ஸ் நிர்வாகம் மூத்த வீரர்களை கழற்றி விட்டு இளம் வீரர்களை அணியில் சேர்க்க முடிவெடுத்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன.

இந்நிலையில் இந்த விவகாரம் குறித்து இந்திய முன்னாள் வீரரான ஸ்ரீகாந்த் சில கருத்துகளை கூறியுள்ளார்.

இது தொடர்பாக பேசிய அவர் கூறுகையில், "நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். நாளின் இறுதியில் இது பிரான்சைஸ் கிரிக்கெட். இது தமிழ்நாடு கிரிக்கெட் அல்ல. அஸ்வின் உருவாக்கிய அனைத்து சாதனைகளுக்காகவும் நாம் அனைவரும் அவரைப் பாராட்டுகிறோம். அவர் ஐ.பி.எல்.க்காக அற்புதமாகச் செய்துள்ளார், அவர் சிஎஸ்கேவுக்காக அற்புதமாகச் செய்துள்ளார், அதுமட்டுமின்றி இந்தியா மற்றும் தமிழ்நாட்டிற்காகவும் அவர் அற்புதமாக செயல்பட்டுள்ளார்.

ஆனால் அதற்காக சிஎஸ்கே கோப்பையை வெல்லப் போகிறார்கள் என்று அர்த்தமல்ல. கடந்த இரண்டு ஆண்டுகளைப் பார்த்தால், சென்னை சூப்பர் கிங்ஸ் பிளே ஆப் சுற்றுக்கு தகுதி பெறவில்லை. அதனால் அவர்கள் என்ன செய்தார்கள்? அவர்கள் சிறந்த அணியைத் தேர்வு செய்ய முயன்றனர். இளம் வீரர்களான ஆயுஷ் மத்ரே, டெவால்ட் பிரெவிஸ் மற்றும் உர்வில் படேலைப் பார்த்தால், சில போட்டிகளில் அற்புதமாக விளையாடினார்கள். எனவே பேட்டிங் வலுவாகத் தெரிகிறது.

எனவே அவர்கள் சில நல்ல பந்து வீச்சாளர்களைப் பெற வேண்டும். எனவே அவர்கள் நிச்சயமாக அவர்களுக்கு சாம்பியன்ஷிப்பை வெல்லும் ஒரு அணியை உருவாக்க முயற்சிப்பார்கள். ஜாம்பவான் என்ற பெயருக்காக நீங்கள் அவரை வைத்திருக்க முடியுமா? நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும், இது பிரான்சைஸ் கிரிக்கெட். அவர் இந்திய கிரிக்கெட் அணியில் கூட இல்லை. பார்டர்கவாஸ்கர் டிராபியில் அவரை விட வாஷிங்டன் சுந்தரை இந்திய அணி விரும்பியது. அவர் தனது கெரியரின் கடைசி கட்டத்தில் இருக்கிறார். அவர் அற்புதமாக சாதித்துள்ளார். ஆனால் ஐ.பி.எல். போன்ற தனியார் தொடர் வித்தியாசமானது. இது கார்ப்பரேட் நடத்தும் தொடராகும். அதே கார்ப்பரேட் கிரிக்கெட் உங்களுக்கு கோடிக்கணக்கில் பணத்தைத் தருகிறது" என்று கூறினார்

அடுத்த ஐ.பி.எல். தொடருக்கு முன் வீரர்களை தக்கவைப்பதற்கும், விடுவிப்பதற்கும் நவம்பர் மாதம் வரை கால அவகாசம் இருப்பது குறிப்பிடத்தக்கது.

DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.